# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my  Media_Selangor  SelangorTV  selangortv.my  MediaSelangor  SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் பங்குனி மாதம் / மே 05/2023 / May 05/2023





## பந்திங், கம்போங் பாத்திமா கிராமத்தின்

# 25 இந்திய குடும்பங்களுக்கு நிலம் அங்கீகாரம்

**பந்திங்,** சுமார் 36 ஆண்டு காலப் போராட்டத்திற்கு பின் பந்திங் கம்போங் பத்திமா கிராமத்தைச் சேர்ந்த 25 இந்தியக் குடும்பங்கள் நில பட்டாவிற்கான 5ஏ அங்கீகார கடிதத்தைச் சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமீருடின் ஷாரியிடமிருந்து நேற்று பெற்றுக் கொண்டனர்.

இங்கு நேற்று நடைபெற்ற கோல லங்காட் மாவட்ட நிலையிலான கித்தா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வில் மக்களுடன் மாநில அரசு எனும் மக்கள் சந்திப்பில் இந்த நிலபட்டாவிற்கான அங்கீகார கடிதம் வழங்கப்பட்டது.

முன்பு சுங்கை மங்கீஸ் பகுதியில் உள்ள அன் கியாட் தோட்டம் மேம்பாடு காணப்பட்ட போது சுங்கை லங்காட் ஆற்றை ஒட்டிய பகுதியில் 2-5 ஏக்கர் நிலத்தில் 37 முன்னால் தோட்டத் தொழிலாளர்கள் தனி தனி தற்காலிக லாட் நிலத்தில் வீடுகளைக் கட்டி குடியேறியதுடன் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை தற்காலிக நில வரியைக் கட்டி வந்ததாக அந்த கிராமத்து தலைவர் மா.குணசேகரன் கூறினார்.

அதன் பிறகு நில பட்டா விண்ணப்பம் வேண்டி தொடர் போராட்டம் நடத்தியதன் பயனாக இன்று 25 பேருக்கு நில அங்கீகார கடிதம் கிடைக்கப் பெற்றதுடன் கிடைக்காத மீதமுள்ள 12 பேருக்கு மனு செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலா பட்டா அங்கீகார கடிதம் கிடைக்க உறுதுணையாக இருந்த மாநில மந்திரி புசார், கோலலங்காட் தொகுதி தலைவர் ஹரிதாஸ் ராமசாமி, தெலுக் டத்தோ சட்ட மன்ற உறுப்பினர், மாநில ஆட்சிக் குழு உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மற்றும் அனைவ-ருக்கும் கம்போங் பாத்திமா கிராமத்து சார்பாக தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக மா. குணசேகரன் கூறினார்.


பக்கம் 3 — (ஐ-சீட்) திட்டத்தின் மூலம் இந்திய சமூதாயத்திற்கு உதவி

பக்கம் 7 — மாநில அரசின் இலவசக் காப்புறுதித் திட்டத்தில் 10 லட்சம் மாணவர்கள் இயல்பாகப் பதிவு

பக்கம் 9 — இலவசக் குடிநீர்த் திட்டம் பயனாளிகளின் வருமான வரம்பை 6,000 வெள்ளியாக உயர்த்த சிலாங்கூர் அரசு திட்டம்

## சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளியில் 115 மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர்ந்தனர்



**ஷா ஆலம்,** இங்குள்ள சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளியில் 2023/2024 கல்வியாண்டில் 115 மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர்ந்துள்ளனர். புதிதாக சேர்ந்த மாணவர்களுடன் சேர்த்து இப்பள்ளியில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை

முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக நான்கு வகுப்பறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பள்ளியின் வாரியத் தலைவர் எம்.சுகுமாறன் கூறினார்.

புதிதாக மேலும் பலர் பதிவு செய்வதற்குரிய வாய்ப்பு உள்ளதால் இப்பள்ளியில் இன்னும் சில தினங்களில் மாணவர்கள் எண்ணிக்கை உயர்வு காண்பதற்குரிய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பள்ளியில் செயல்படும் பாலர் பள்ளியில் 100 மாணவர்கள் இதுவரை பதிவு செய்துள்ள வேளையில் மேலும் 28 மாணவர்கள் காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சொன்னார்.

பாலர் பள்ளியில் உள்ள நான்கு வகுப்புகளில் தலா 25 மாணவர்கள் வீதம் 100 மாணவர்கள் மட்டுமே பயில்வதற்குரிய வசதி உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, பெட்டாலிங் பெர்டானா மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பள்ளிகளில் முதலாம் ஆண்டில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகம் மாற்றம் காணப்படவில்லை

சீபீல்டு பள்ளியில் 14 மாணவர்களும் துன் சம்பந்தன் பள்ளியில் 105 மாணவர்களும் கிளன்மேரி பள்ளியில் 13 மாணவர்களும் ஈபோர் பள்ளியில் 8 மாணவர்களும் சுங்கை ரெங்கம் பள்ளியில் 115 மாணவர்களும் மிட்லண்ட்ஸ் பள்ளியில் 14 மாணவர்களும் ராசாக் பள்ளியில் 25 மாணவர்களும் கின்ராரா பள்ளியில் 116 மாணவர்களும் செர்டாங் பள்ளியில் 95 மாணவர்களும் பூச்சோங் பள்ளியில் 115 மாணவர்களும் காசல்பீல்டு பள்ளியில் 114 மாணவர்களும் ஹைக்கோம் பள்ளியில் 19 மாணவர்களும் சேர்ந்துள்ளனர்.

## புன்னகை பூத்த முகப் பொலிவுடன் வாகீசர் தமிழ்ப்பள்ளியில் 100 புதிய மாணவர்கள் சேர்ந்தனர்.

**கோலா சிலாங்கூர்,** நாடு தழுவிய நிலையில் இன்று பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டன அந்த வகையில் கோல சிலாங்கூர் வட்டாரத்தில் அதிக மாணவர்கள் படிக்கும் தமிழ்ப் பள்ளியாக வாகீசர் தமிழ்ப்பள்ளி இன்னும் சிறப்பாகப் பல புதிய மாணவர்களுடன் தொடங்கியது.

அனுபவமிக்க பல ஆசிரியர்களைக் கொண்ட இப் பள்ளி " தமிழ்ப்பள்ளி " என்ற சொல்லை மையமாகக் கொண்டு வளர்ந்து வருகிறது. அந்த வகையில் ஆண்டின் தொடக்க நாளான இன்று முதலாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களின் எண்ணிக் கையைப் பார்த்தோம் என்றால் இவ்வாண்டு சென்ற ஆண்டை காட்டிலும் சிறப்பாக உள்ளது.

இந்த ஆண்டு முதலாம் வகுப்பில் இணைவதற்கு 50 – மாணவர்களும், பாலர் பள்ளி வகுப்பில் 50 மாணவர்களும் இணைந்தது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது என்று பள்ளியின் தலைமை ஆசிரியை தனது துவக்க உரையில் கூறினார்.

அதே சமயத்தில் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை சரியான நேரத்தில் அழைத்து வந்து பள்ளிக்கு பெருமை கூறினார் வாகீசர் தமிழ் பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி : பெண்ணரசி தனபால் அவர்கள்.



# 25 வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவி

### மிட்லண்ட்ஸ் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் வழங்கியது

**ஷா ஆலம்,** இங்குள்ள செக்சன் 7, மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியில் பயிலும் வசதி குறைந்த 25 மாணவர்களுக்கு மிட்லண்ட்ஸ் ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தானம் சார்பில் தலா 50.00 வெள்ளி நிதியுதவி வழங்கப்பட்டது.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் சிரமத்தைக் குறைக்கும் நோக்கிலான இந்த நிதியுதவித் திட்டத்திற்கு ஆலயத்தின் சார்பில் 1,250 வெள்ளி செலவிடப்பட்டதாக ஆலயத் தலைவர் ரா.மோகன்ராஜ் கூறினார்.

ஆலயத்தின் சமூக நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக கூறிய அவர், கடந்த ஆண்டுகளில் மாணவர்களுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்கப்பட்ட வேளையில் இவ்வாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்-களுக்கு 50.00 வெள்ளி ரொக்கமாக வழங்கப்படுகிறது என்றார்.

வழங்கப்படும் தொகை பெரியதாக இல்லாவிட்டாலும் பிள்ளைகளின் பள்ளிச் செலவுகளை ஈடுகட்டுவதில் பெற்றோர்கள் எதிர் நோக்கும் சுமையை ஓரளவு குறைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார் அவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இத்தகைய உதவித் திட்டங்-களை ஆலய நிர்வாகம் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் அவர் வாக்குறுதி-யளித்தார். இந்த நிகழ்வில் பள்ளியின் தலைமை-யாசிரியர் திருமதி தேவமணி, வாரியத் தலைவர் உதயசூரியன், ஆலயச் செயலாளர் நா.சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# இந்தியப் பாரம்பரியத் துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறை:
## நாளை இரு அமைச்சுகளுடன் பேச்சு - வி. சிவக்குமார் தகவல்



**பூச்சோங்,** நாட்டில் இந்தியத் தொழில்துறைகள் குறிப்பாக முடித்திருத்தும் நிலையங்கள், ஜவுளியகங்கள் மற்றும் நகைக்கடைகள் அந்நிய தொழிலாளர்கள் பற்றாக்குறையை எதிர் நோக்கி இருக்கிறது.

வேலை செய்ய அந்நிசயத் தொழிலாளர்கள் இல்லாததால் இந்தியப் பாரம்பரிய தொழில் துறைகள் கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளன.

இந்நிலையில் அந்நியத் தொழிலாளர்கள் விவகாரம் தொடர்பில் இரு அமைச்சர்களையும் நாளை வியாழக்கிழமை சந்திக்கவிருப்பதாக மனிதவள அமைச்சர் வி. சிவக்குமார் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக ஜவுளி, நகை பொற்கொல்லர், சிகையலங்கரிப்பு ஆகிய தொழில் துறைகளில் கடுமையான அந்நியத் தொழிலாளர்கள் பற்றாக்குறையை எதிர் நோக்கி இருப்பதை நன்கு அறிந்துள்ளேன்.

கடந்த பல ஆண்டுகளாக நீடித்து கொண்டிருக்கும் இந்த பிரச்சினைக்கு நல்ல முறையில் தீர்வு காண உள்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சைஃபுடின் நசுத்தியோன், உள்நாட்டு வர்த்தக வாழ்க்கை செலவினத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாலாவுடின் அய்யூப் ஆகியோருக்குக் கடிதம் எழுதி உள்ளேன்.

# "ரிதம்" அறவாரியத்தின் ஏற்பாட்டிலான வழிகாட்டி வகுப்புகள் மூலம் 200 மாணவிகள் பயன் பெற்றனர்

**கோலாலம்பூர்,** ரிதம் அறவாரியத்தின் முதல் கட்ட மஹாராணி பள்ளித் திட்டம் (எம்.எஸ்.பி.) மூலம் வசதி குறைந்த பி40 தரப்பு இளம் பெண்களுக்கு ஈராண்டுகள் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களும் பயிற்சிகளும் ஆக்ககரமான பலனைத் தந்துள்ளன.

கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளித் தவணைக்குப் பிந்தைய இந்த திட்டத்தின் வழி சிலாங்கூரிலுள்ள ஐந்து பள்ளிகளில் பயிலும் 200 மாணவிகளின் வாழ்வில் அபரிமித மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று ரிதம் அறவாரியத்தின் தலைவர் சாந்தி பெரியசாமி கூறினார்.

கோம்பாக் செத்தியா இடைநிலைப்பள்ளி, பண்டார் ரிஞ்சிங் இடைநிலைப்பள்ளி, தெங்கு இட்ரிஸ் ஷா இடைநிலைப்பள்ளி, பத்து உனு சோர் இடைநிலைப்பள்ளி, தெங்கு அம்புவான் ஜெமஹா இடைநிலைப்பள்ளி ஆகி ஐந்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகள் இந்த திட்டத்தில் பங்கேற்றதாக அவர் சொன்னார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த 14 முதல் 16 வயது வரையிலான மாணவிகள் மென் திறன்களையும் தலைமைத்துவ ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதில் இந்த திட்டம் பேருதவியாக இருந்தது என்று அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

ரிதம் அறவாரியத்தின் பயிற்றுநர்கள் 1,600 மணி நேரத்தை உள்ளடக்கிய கடந்தாண்டு எட்டு கட்டப் பயிற்சியை அம்மாணவிகளுக்கு வழங்கினர் என்றார் அவர்.

இந்த முதல் கட்ட மஹராணி பள்ளித் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அடுத்தக் கட்டமாக நெகிரி செம்பிலானில் உள்ள ஐந்து பள்ளிகளில் இத்திட்டத்தை தாங்கள் விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக அவர் சொன்னார்.

கல்வியமைச்சு இந்த திட்டத்தைத் தன் வசப்படுத்தி தேசியப் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக இதனை மாற்றும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.







# (ஐ-சீட்) திட்டத்தின் மூலம் இந்திய சமூதாயத்திற்கு உதவி

**உலு லங்காட்,** சிலாங்கூர் இந்தியர் அதிகாரமளித்தல் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு (ஐ-சீட்) திட்டத்தின் பயனாளிகள், தொற்று நோய்க்கு பின் வணிகத்தைத் தொடர மாநில அரசின் உதவியை உயிர் நாடியாகக் கருதுகின்றனர்.

தொழில் முனைவோர், என்.பனிர்செல்வம் (41), நாட்டைத் தாக்கிய கோவிட் -19 தொற்றுநோய், கடந்த 20 ஆண்டுகளாக அவர் நடத்தி வந்த வணிகத்தை சோதித்ததாகக் கூறினார்.

ஐ-சீட் திட்டம் ஏப்ரல் 2021 இல் தொடங்கப்பட்டது. இது இந்தியர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விண்ணப்பம் செய்யும் இந்தியர்களின் வணிகத்திற்க்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

விண்ணப்பத் தகுதிகள் சிலாங்கூர் குடிமக்கள் அல்லது 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசிப்பவர்கள், தனிநபர் அல்லது குடும்ப வருமானம் மாதத்திற்கு RM3,000 க்கும் குறைவாக உள்ளவர்கள் மற்றும் அவர்களின் வணிகம் சிலாங்கூர் மாநிலத்தில்செயல்பட வேண்டும்.



# தனபாலனுக்கு மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பு உபகரணங்கள்
### - சித்தம் வழங்கியது

**ஷா ஆலம்,** "சித்தம்" எனப்படும் இந்திய தொழில் ஆர்வலர் மையத்தின் உதவியால் மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பு பட்டறை நடத்தி வரும் எம். தனபாலன் (வயது 38) என்பவருக்கு பழுதுபார்ப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. சித்தம் அமைப்பின் வாயிலாக இந்திய தொழில்முனைவோருக்கு வர்த்தக உபகரணங்கள் வழங்கப்படும் தகவலை பேஸ்புக் மற்றும் நண்பர்கள் வாயிலாக அறிந்து அதற்கு விண்ணப்பம் செய்ததாக தனபாலன் சொன்னார். தனது விண்ணப்பத்தை அங்கீகரித்து இந்த உபகரணங்களை வழங்கி உதவிய சித்தம் பொறுப்பாளர்கள், தொழில்முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் மற்றும் மாநில அரசுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் கூறினார்.



## 1,724 ஜோம் ஷாப்பிங் வவுச்சர்கள் ஸ்கிம் மெஸ்ர உசிய எமாஸ் (SMUE) உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது – சுங்கை துவா தொகுதி

செலாயாங்,
சுங்கை துவா தொகுதியில் ஜனவரி முதல் கடந்த வாரம் வரை மொத்தம் 1,724 ஜோம் ஷாப்பிங் வவுச்சர்கள் ஸ்கிம் மெஸ்ர உசிய எமாஸ் (SMUE) திட்டத்தில் பதிவு கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

சுங்கை துவா தொகுதியின் சமூகச் சேவை மைய மேலாளர் மைமோன் மிஸ்மான், இன்னும் 2,276 உறுப்பினர்கள் வவுச்சர்களை பெற்று கொள்ள தனது தரப்பு காத்திருப்பதாகக் கூறினார்.

"இந்த ஆண்டு, மொத்தம் 4,000 பதிவு செய்யப்பட்ட மூத்தக் குடிமக்கள் வவுச்சர்களை பெற தகுதியுடையவர்கள். அவர்கள் ஒவ்வொரு திங்கள் முதல் வெள்ளி வரை வவுச்சர்களை பெற்று கொள்ள சுங்கை துவா தொகுதியின் பிகேஎம் அலுவலகத்துக்கு வரலாம்," என்று அவர் கூறினார்.

ஜனவரி முதல் கடந்த வாரம் வரை ஸ்கிம் மெஸ்ர உசிய எமாஸ் திட்டத்திற்கு சுமார் 400 புதிய பதிவுகளை பெற்றதாகக் கூறினார்.

# ஐந்து ஆண்டுகளில் 189 உயர்கல்வி மாணவர்களுக்கு

### வெ.42.7 லட்சம் உபகாரச் சம்பளம் - சிலாங்கூர் அரசு வழங்கியது



ஷா ஆலம், சிலாங்கூர் அரசு கடந்த 2018 தொடங்கி இதுவரை 189 உயர்கல்விக்கூட மாணவர்களுக்கு 42 லட்சத்து 73 வெள்ளியை உபகாரச் சம்பளமாக வழங்கியுள்ளது.

பதினோரு துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான தொகையில் ஒரு பகுதியை வழங்குவதற்காக சிலாங்கூர் மாநில உபகாரச் சம்பள சேமநிதி பயன்படுத்தப் பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கடந்த 2018ஆம் ஆண்டு முதல் உயர்கல்விக்கூட மாணவர்களுக்கு இத்தொகை வழங்கப்பட்டதாக கூறிய அவர், அந்த ஆண்டில் 103 மாணவர்களும் 2019ஆம் ஆண்டில் 18 மாணவர்களும் 2020இல் 18 மாணவர்களும் 2021 இல் 9 மாணவர்களும் 2022இல் 41 மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர் என்றார்.

இது தவிர, பித்தாரா சிலாங்கூர் உபகாரச் சம்பளத் திட்டத்தின் கீழ் அயர்லாந்து நாட்டின் ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர் ஒருவருக்கு கடந்த 2021ஆம் ஆண்டில் 10 லட்சம் வெள்ளியை மாநில அரசு உபகாரச் சம்பளமாக வழங்கியது என்றும் அவர் குறிப்பிட்டார். மத்திய கிழக்கு உபகாரச் சம்பளத் திட்டத்தின் கீழும் மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கியுள்ளோம்.. படிப்பை முடித்தவுடன் சிலாங்கூர் மாநிலத்தில் அல்லது மாநில அரசின் துணை நிறுவனங்களில் பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் அத்தகைய சிறந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது என அவர் கூறினார்

# கோம்பாக் – பகாங் சாலை மேம்படுத்தப்பட வேண்டும்

### மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி


கோலாலம்பூர்,
சாலை நெரிசலை சமாளிக்க கோம்பாக் முதல் பெந்தோங் வழியாக பகாங் வரை செல்லும் சாலையை மேம்படுத்த வேண்டும் என்று கோம்பாக் நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறுகையில், 1915 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படும் பழைய சாலை, குறிப்பாக காலை மற்றும் இரவு நேரங்களில் கனரக வாகனங்களுக்கு மாற்றுப் பாதையாகும்.

"போக்குவரத்து அமைச்சகம் அல்லது பொதுப்பணி அமைச்சகம் சாலையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் என்று நான் நம்புகிறேன்," என்று அவர் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

அச்சாலையை மேம்படுத்துவது பொருளாதார மேம்பாட்டிற்கும், சாலையைப் பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பிற்கும் உதவுவதோடு, சிலாங்கூர் மற்றும் பகாங் இடையைப் பயணத் தொடர்பை மேம்படுத்தலாம் என்று அமிருடின் மேலும் கூறினார்.

"அதுமட்டுமில்லாமல், இந்தச் சாலை சைக்கிள் ஓட்டுபவர்களுக்கும் ஒரு தேர்வாக அமைந்துள்ளது. பாதுகாப்பு மற்றும் பொது வசதிக்காக, இந்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று நம்புகிறேன்," என்றார்.



**ஷா ஆலம்,** இவ்வாண்டில் நடைபெறவிருக்கும் சிலாங்கூர் அனைத்துலக வர்த்தக உச்சநிலை மாநாட்டை (சிப்ஸ்) பிரபலப்படுத்தும் நோக்கில் சிலாங்கூர் மாநில பேராளர் குழு தென்கிழக்காசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும்.

# "சிப்ஸ்" மாநாட்டை பிரபலப்படுத்த தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பேராளர் குழு பயணம்

தாய்லாந்து, வியட்னாம், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இந்த பயணம் வரும் ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்படும் என்று முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

சிப்ஸ் 2023 மாநாட்டை பிரபலப்படுத்துவதற்காக சில தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்சிக்குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

இந்த சிப்ஸ் 2023 மாநாட்டை வெறும் சில்லறை வர்த்தக கண்காட்சியாக அல்லாமல் ஒரு வாணிகத் தளமாக உருவாக்க விரும்புகிறோம் என்று நேற்று இங்கு ஸ்மார்ட் சிலாங்கூர் ராயா திட்டங்களை அறிவிக்கும் நிகழ்வில் அவர் சொன்னார்.

பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கிய மாநாட்டில் உரையாற்ற வருமாறு சம்பந்தப்பட்ட நாடுகளின் அமைச்சர்களுக்கு அழைப்பு விடுப்பதும் இந்த பயணத்தின் நோக்கமாகும் என்று தெங் தெரிவித்தார்.

முதலீட்டுத் துறையுடன் தொடர்புடைய, அமைச்சர்கள், அமைச்சின் அதிகாரிகள், துறை மற்றும் நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுக்கு இந்த மாநாடு குறித்து விளக்கமளித்து அதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுப்பதையும் இந்தப் பயணம் இலக்காக கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் ஆசியான் நாடு ஒன்றின் அமைச்சர் பேச்சாளராக கலந்து கொள்வது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது என்று அவர் மேலும் கூறினார். இந்த சிப்ஸ் 2023 மாநாடு கோலாலம்பூர் அனைத்துல வர்த்தக மையத்தில் வரும் அக்டோபர் 19 முதல் 22 வரை நடைபெறவுள்ளது.

## மாநிலத்தின் வருமானம் அதிகரிப்பு- சுல்தான் பெருமிதம்

ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவு மாநிலத்தின் வருமானம் கடந்தாண்டு அதிகரித்தது குறித்து சிலாங்கூர் சுல்தான் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டில் 228 கோடியே 40 லட்சம் வெள்ளியாக இருந்த மாநிலத்தின் வருமானம் கடந்தாண்டு 253 கோடியே 30 லட்சம் வெள்ளியாக உயர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட 205 கோடி வெள்ளி இலக்கை விட இது அதிகமாகும் என்றார்.

எனது அரசாங்கத்தின் நிதி நிலை குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். கடந்த 2022ஆம் ஆண்டு சிலாங்கூர் மாநிலத்திற்குச் சிறப்பான ஆண்டாக விளங்கியதோடு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24.8 விழுக்காட்டுப் பங்களிப்பையும் அது வாங்கியது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2021ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3.1 விழுக்காடு மட்டுமே இருந்த வேளையில் சிலாங்கூர் மாநிலத்தின் வளர்ச்சி ஐந்து விழுக்காட்டை எட்டியது என்று அவர் உரையில் தெரிவித்தார்.

கித்தா சிலாங்கூர் உணர்வுடன் மாநிலத்தைச் செவ்வனே வழிநடத்திச் செல்லும் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமையிலான நிர்வாகத்திற்கு தாம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் சொன்னார்.

அதிகமான முதலீட்டாளர்களை மாநிலத்திற்கு ஈர்ப்பதில் நட்புறவான அணுகுமுறையைக் கடைபிடிக்கும் படியும் மாநில அரசை அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்தாண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் 970 கோடி வெள்ளி மதிப்புள்ள 199 தொழில்துறை சார்ந்த முதலீடுகளைப் பெற்று, அதன் மூலம் 11,601 வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது என அவர் தெரிவித்தார்.

## சிலாங்கூரின் 46 நலத்திட்டங்களில் பங்கேற்பீர் - சுல்தான் வேண்டுகோள்

மாநில அரசு அமல்படுத்தியுள்ள இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.எஸ்.பி.) முன்னெடுப்பில் இடம் பெற்றுள்ள 46 நலத் திட்டங்களில் பங்கேற்று பயனடையுமாறு மாநில மக்களை சுல்தான் கேட்டுக் கொண்டுள்ளார்.பயன்தரும் பல்வேறு நலத் திட்டங்களை ஐ.எஸ்.பி. கட்டமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசின் நடவடிக்கையை பாராட்டினார் சுல்தான்.

மாநில மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கல்வி, சமூக நலன், வீட்டுடைமை, மனித மூலதனம், சுகாதாரம் உள்ளிட்ட அம்சங்களை அந்த 46 திட்டங்களும் உள்ளடக்கியுள்ளன என்று அவர் சொன்னார். தகுதி உள்ள மாநில மக்கள் இந்த ஐ.எஸ். பி. திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுகூலங்களைப் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று மாநில சட்டமன்றக் கூட்டத்தை இன்று தொடக்கி வைத்து உரையாற்றுகையில் கூறினார்.



## மாநிலத் தேர்தலில் விதிமுறைகளை கடைபிடியுங்கள் - சுல்தான் அறிவுறுத்து

மாநிலத் தேர்தலின் போது விதிமுறைகளை அனைத்துத் தரப்பினரும் முறையாக கடைபிடிக்க வேண்டும் என்பதோடு ஒருவரை ஒருவர் மதித்தும் செயல்பட வேண்டும் என்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் வலியுறுத்தியுள்ளார். தேர்தலில் இறுதி முடிவை எடுப்பதற்கு முன்னர் அரசியல்வாதிகளின் செயல்பாடுகளை மக்கள் நன்கு கவனிக்கும் அதேவேளையில் மதிப்பீடும் செய்வர் என்று சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா தெரிவித்தார். சட்டமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களை விவேகத்துடனும் ஆக்கப்பூர்மாக விவாதங்களில் பங்கேற்று பிரச்சனைகளுக்கு தீர்வு காண கேட்டுக்கொண்டார்.

## பள்ளிவாசல்களை அரசியல் களமாக்க வேண்டாம்- சுல்தான்

அரசியல் பிரசார நடவடிக்கைகளுக்கு பள்ளிவாசல்கள் மற்றும் சூராவ்களைப் பயன்படுத்தும் கலாச்சாரம் முஸ்லீம்கள் குறிப்பாக மலாய்க்காரர் களிடையே பிளவு ஏற்பட வழிவகுக்கும் என்ற மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் கவலை தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் மத்தியில் பகைமைப் போக்கும் சச்சரவுகளும் ஏற்பட பள்ளிவாசல்களும் சூராவ்களும் காரணமாக இருக்கக் கூடாது.

முடிவே இல்லாத மாறுபட்ட அரசியல் சித்தாந்தம் மற்றும் அரசியல் பழிவாங்கும் போக்கு காரணமாக முஸ்லீகளுக்கு இடையே இடைவெளி அதிகரிப்பதற்கு உரிய சூழல் உருவாகும் என மாநில சட்டமன்றக் கூட்டத் தொடரை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்தார்.

அவ்விரு சமய வழிபாட்டுத் தலங்களும் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபட்டிருப்பதை உறுதி செய்யும்படி சிலாங்கூர் இஸ்லாமிய சமய மன்றம் (மாய்ஸ்) மற்றும் சிலாங்கூர் இஸ்லாமிய சமய இலாகாவை (ஜாய்ஸ்) தாம் மீண்டும் கேட்டுக் கொள்வதாக அவர் சொன்னார்.

பள்ளிவாசல்கள் மற்றும் சூராவ்களில் சமய உரையாற்றும் ஒரு சிலர் மாறுபட்ட அரசியல் சித்தாந்தம் காரணமாக எதிர்த் தரப்பினரைச் சிறுமைப்படுத்துவது, ஏளனப்படுத்துவது, அவமதிப்பது, நிந்திப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய செயல்களை தடுக்காவிட்டால் முஸ்லிம்கள் குறிப்பாக மலாய்காரர்கள் மத்தியில் பிளவு உண்டாகும் என்று நான் அஞ்சுகிறேன். பள்ளிவாசல்களின் சமய உரை, பிரசங்கம், மற்றும் வகுப்புகள் நடத்துவதற்கு மாய்ஸ்சிடமிருந்து அங்கீகாரம் பெற்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சைபர் ஜெயா மருத்துவமனையை சுல்தான் இன்று திறந்து வைத்தார்

சைபர் ஜெயா மருத்துவமனையை மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் இன்று அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார். இந்த திறப்பு விழாவில் சுல்தானுடன் சிலாங்கூர் தெங்கு பெர்மைசூரி நோராஷிகின் மற்றும் ராஜா மூடா தெங்கு அமீர் ஷா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மருத்துவமனையை திறந்து வைப்பதன் அடையாளமாக சுல்தான் தகடு ஒன்றில் தனது கையெழுத்தைப் பதித்தார். திறப்பு விழாவுக்கு பின்னர் சுல்தான் தம்பதியர் கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளிகள் சிகிச்சைப் பிரிவு, மருந்தகம் மற்றும் சிறார் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டனர்.

கடந்தாண்டு நவம்பர் 11ஆம் தேதி முதல் செயல்பட்டு வரும் இந்த மருத்துவமனை 12.8 ஏக்கர் நிலப்பரப்பில் 50 கோடியே 88 லட்சம் வெள்ளி செலவில், ஒன்பது மாடிக் கட்டிடத்தில் 288 படுக்கைகளுடன் நிர்மாணிக்கப்பட்டு செயல்படும் இது, 14 சிறப்பு மருத்துவச் சேவைகளை கட்டங் கட்டமாக வழங்க உள்ளது.

## சிலாங்கூர் அரசின் நிதி நிலைமை வலுவாக உள்ளது - மந்திரி புசார் அறிவிப்பு

உலு லங்காட், அண்மைய சில ஆண்டுகளாக கிடைத்து வரும் உயர்ந்த பட்ச வருமானம் காரணமாக மாநிலத்தின் நிதி நிலைமை வலுவாக உள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இதன் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய எந்த விளைவையும் எதிர்-கொள்ளும் திறனை அது பெற்றுள்ளது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

மாநிலத்தின் வருமானத்தை முறையாக வசூலிக்க க்கூடிய திறனை சிலாங்கூர அரசு கொண்டுள்ளது. கடந்தாண்டு நாம் 250 கோடிக்கு அதிகமான தொகையை வசூலித்தோம். உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்பை அதாவது 24.8 விழுக்காட்டை வழங்கும் மாநிலமாக சிலாங்கூர் விளங்குவதாக இன்று இங்கு நடைபெற்ற ஜெலாஜா கித்தா சிலாங்கூர் நிகழ்வில் உரையாற்றிய போது அவர் சொன்னார். உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்பை அதாவது 24.8 விழுக்காட்டை வழங்கும் மாநிலமாக சிலாங்கூர் விளங்குவதாக இன்று இங்கு நடைபெற்ற ஜெலாஜா கித்தா சிலாங்கூர் நிகழ்வில் உரையாற்றிய போது அவர் சொன்னார்.

### இலவசக் கோவிட்-19 தடுப்பூசி மூலம் சுமார் 350,000
## பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்

கோலா லங்காட், 2021 முதல் மாநில அரசு வழங்கிய இலவச கோவிட்-19 தடுப்பூசி மூலம் சுமார் 350,000 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

வாரிசான் நெகிரி அறக்கட்டளை நிதியை பயன்படுத்தி வாங்கப்பட்ட 900,000 தடுப்பூசிகளில் 700,000 இதுவரை சிலாங்கூர் தடுப்பூசி (செல்வெக்ஸ்) திட்டத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக டத்தோ மந்திரி புசார் கூறினார்.

"மலேசியாவில் சொந்தமாகத் தடுப்பூசியை வாங்கி மக்களுக்கு இலவசமாக வழங்கிய ஒரே மாநிலம் சிலாங்கூர் மட்டுமே.

கடந்த பிப்ரவரி 7 முதல், இலவசக் கோவிட்-19 தடுப்பூசி மற்றும் பூஸ்டர் டோஸ் வழங்கும் திட்டம் மாநிலத்தில் உள்ள 15 செல் கேர் கிளினிக்குகள் மற்றும் தி கே எல் கிளினிக் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

நாடு தொற்றுநோயால் பாதிக்கப்பட்டபோது, மாநில அரசு மக்களுக்கு நோய் தடுப்பூசிகள் வழங்குவதை விரைவு படுத்துவதற்காகச் செல்வெக்ஸ் திட்டத்தைச் செயல்படுத்தியது. அதைத் தொடர்ந்து செல்வெக்ஸ் பூஸ்டர் திட்டத்தின் மூலம் மக்களுக்குப் பூஸ்டர் டோஸ் வழங்கப்பட்டது.




## உரப்பாசனப் பயிரீட்டுத் திட்டத்திற்குக் காலி நிலங்களை அடையாளம் காண்பீர்- ஊராட்சி மன்றங்களுக்கு வலியுறுத்து

பெட்டாலிங் ஜெயா, உரப்பாசன பயிரீட்டுத் திட்டத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக தங்கள் பகுதிகளில் உள்ள காலி நிலங்களை அடையாளம் காணும்படி ஊராட்சி மன்றங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள ஐ.பி.ஆர். எனப்படும் மக்கள் வருமானத் திட்டத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் வேளாண் தொழில் முனைவோர் முன்னெடுப்புக்கு (இந்தான்) ஆதரவளிக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்-கொள்ளப்படுகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

தெனாகா நேஷனல் பெர்ஹாட் நிறுவனத்தின் மின் பாதைக்கு கீழுள்ள இடங்கள் அல்லது அரசாங்க நிலங்களாக அவை இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மக்களின் வருமானத்தைப் அதிகரிப்பதற்கு உதவக்கூடிய சிறந்த ஒரு திட்டமாக இது விளங்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் என்றா அவர். இந்த பிஜே சிட்டி ஃபூட் வேலி என்பது இதற்கு முன்னர் அமல்படுத்தப்பட்ட சமூக வேளாண் திட்டம் போலன்றி சுமார் 80 ஏக்கர் நிரப்பரப்பில் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் மேற்கொள்ளப்படும் ஒரு நீர்ப்பாசன திட்டமாகும் என அமிருடின் சொன்னார்.

## சிலாங்கூரில் முதலீடு செய்ய ஜப்பானிய பன்னாட்டு நிறுவனங்கள் ஆர்வம்- மந்திரி புசார் தகவல்

ஷா ஆலம், சிலாங்கூர் மாநிலத்தில் முதலீடு செய்ய முப்பதுக்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டியுள்ளன. மலேசியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான உந்து சக்தியாக சிலாங்கூர் விளங்குவதை இது புலப்படுத்துகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

ஜப்பானுக்கு தாம் மேற்கொண்ட குறுகிய கால வருகையின் போது மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை அந்நிறுவனங்கள் வெளிப்படுத்தியதாக அவர் சொன்னார்.

இன்வெஸ்ட் சிலாங்கூர், மிடா எனப்படும் மலேசிய முதலீட்டு மேம்பாட்டு நிறுவனம் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த முதலீட்டுப் பயணத்தின் போது ஓசாகா நகரில் கடந்த 7ஆம் தேதியும் தோக்கியோவில் 8ஆம் தேதியும் வட்ட மேசை மாநாடு நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2017 முதல் 2021 வரையிலான மிடாவின் தரவின் படி




அதிக நேரடி முதலீடுகளைப் பதிவு செய்த நாடுகள் பட்டியலில் 80,400 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீடுகளுடன் ஜப்பான் மூன்றாவது இடத்தில் உள்ளது. சிலாங்கூரை மையமாக க் கொண்ட சோனி, பெனாசோனிக், டோயோட்டா, டென்சோ, யாய்கின் போன்ற நிறுவனங்களின் வாயிலாக இங்கு சுமார் 5,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# சிலாங்கூரில் ஒன்பது ஆதரவற்றோர் இல்லங்களை மேம்படுத்த

## RM180,000 மானியம் வழங்கப்பட்டது




**ஷா ஆலம்,**
சிலாங்கூரில் உள்ள ஒன்பது ஆதரவற்றோர் இல்லங்கள் வசதிகளை மேம்படுத்த மாநில அரசிடமிருந்து RM180,000 மானியம் பெற்றன..

பெண்கள் மற்றும் குடும்ப மேம்பாட்டு எஸ்கோ, ஆதரவற்றோர் இல்லங்களை விட்டு வெளியேறிய பிறகு, பெண்களின் திறன்களை வளர்ப்பதற்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும் இந்த மானியம் வழங்கப்படுவதாக கூறினார். "மாநில அரசு, 10 பராமரிப்பாளர்களுக்கு தலா RM2,000 தொகையில் தீவிரக் குழந்தை மேம்பாட்டு கல்விக்கான மானியங்களை வழங்கியது" என்று டாக்டர் சித்தி மரியா மஹ்மூத் கூறினார்.

இதற்கிடையில், டாக்டர் சித்தி மரியா 12 திட்டங்களை அறிவித்தார், அவை இந்த ஆண்டு பெண்கள் மேம்பாட்டு நிலைக்குழு வால் 4 மில்லியனுக்கும் அதிகமான ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.




# மக்கள் நல அறிமுக நிகழ்வுகளில் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் 1,500 பேர் பங்கேற்பு

பெட்டாலிங் ஜெயா -
சிலாங்கூர் அரசின் மக்கள் நலத் திட்டங்களை அறிமுகம் செய்யும் ஜெலாஜா கித்தா சிலாங்கூர் பென்யாயாங் திட்டங்களில் நடத்தப்பட்ட இலவச மருத்துவப் பரிசோதனைகளில் இதுவரை 1,500 பேர் வரை பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

கடந்த பிப்ரவரி மாதம் 18ஆம் தேதி தொடங்கி மாநிலத்தின் ஏழு மாவட்டங்களில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வுகளில் அந்த எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த சிலாங்கூர் சாரிங் இரண்டாம் கட்ட நிகழ்வுக்கு மக்கள் மத்தியில் சிறப்பான ஆதரவு கிடைத்துள்ளதோடு இது பயன்மிக்க ஏற்பாடு என்பதும் நிரூபணமாகியுள்ளது என்று அவர் சொன்னார்.

மேலும் அதிகமானோர் பயன்பெற வேண்டும் என்பதற்காக இத்திட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறோம். இத்திட்டத்தில் பங்கு கொள்ள அதிகமானோர் வருகின்றனர். உதாரணத்திற்கு இன்றைய நிகழ்வில் ஷா ஆலம், அம்பாங்கிலிருந்தும் பலர் வந்தனர் என்று அவர் தெரிவித்தார்.

பொது மக்கள் முன்கூட்டியே நோய்களைக் கண்டறிவதற்கு ஏதுவாக சிலாங்கூர் சாரிங் இலவச மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தை மாநில அரசு கடந்தாண்டு ஏற்பாடு செய்திருந்தது.

# மாநில அரசின் இலவசக் காப்புறுதித் திட்டத்தில் 10 லட்சம் மாணவர்கள் இயல்பாகப் பதிவு




ஷா ஆலம், சிலாங்கூர் மாநில அரசின் இலவசப் பொது காப்புறுதித் திட்டத்தில் (இன்சான்) மாநிலத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் சுமார் 10 லட்சம் மாணவர்கள் இயல்பாக பதிவு பெற்றுள்ளனர்.

கல்வியமைச்சர் மற்றும் மாநில கல்வி இலாகாவுடன் மாநில அரசு நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்குரிய சாத்தியம் ஏற்பட்டதாக அவர் சொன்னார்.

பள்ளி செல்லும் அனைத்து மாணவர்களுக்கும் மாநில அரசின் செலவில் காப்புறுதிப் பாதுகாப்பை வழங்க வகை செய்யும் மலேசியாவின் ஒரே திட்டமாக இந்த இன்சான் திட்டம் விளங்குகிறது என அவர் குறிப்பிட்டார்.

இந்த காப்புறுதித் திட்டம் 6,000 கோடி வெள்ளி மதிப்பைக் கொண்டுள்ளது. விபத்தின் காரணமாக உயிரிழப்போரின் குடும்பத்தினர் மற்றும் நிரந்தர முடத்தன்மைக்கு ஆளாவோருக்கு இந்த இத்திட்டத்தின் வாயிலாக 10,000 வெள்ளி வரை இழப்பீடு வழங்கப்படும்.



# சிலாங்கூர் மக்கள் பிரத்தியேக வகுப்பு திட்டத்தில் (பிடிஆர்எஸ்) 50,000 மாணவர்கள் பங்கேற்றனர்

உலு லங்காட் எஸ்பிஎம் தேர்வை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சிலாங்கூர் மக்கள் பிரத்தியேக வகுப்பு திட்டத்தில் (பிடிஆர்எஸ்) 50,000 நான்காம் மற்றும் ஐந்தாம் படிவ மாணவர்கள் பங்கேற்றனர். டத்தோ மந்திரி புசார், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், மூன்று மற்றும் நான்காம் படிவங்களில் பயிலும் தேர்வுகளில் தோல்வியடையும் அபாயத்தில் இருக்கும் மாணவர்கள் இத்திட்டத்தில் கலந்து கொண்டதாகக் கூறினார்.

மேலும், கடந்த ஆண்டு முதல் மாநில அரசு மாணவர்களின் மதிய உணவுக்கான செலவை ஏற்றுகொண்டது என்றார்.

கடந்த ஆண்டு சிலாங்கூர் அரசாங்கம் இத்திட்டத்தை வெற்றியடைய செய்ய 7 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கியது. நாட்டில் தொற்று நோய் தாக்கிய போது மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த திட்டம் இணைய வழி அறிமுகப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஜொகூர்,

## ச்சா மக்களுக்குச் செந்தோசா தொகுதி உதவி

**கிள்ளான்,** கடுமையான வெள்ளம் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட ஜொகூர் மாநிலத்தின் ச்சா வட்டார மக்களுக்குச் செந்தோசா சட்டமன்றத் தொகுதி பல்வேறு உதவிப் பொருள்களை வழங்கியது.

தாமான் செந்தோசா குடியிருப்பாளர் சங்கங்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் இந்த வெள்ள நிவாரண உதவித் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் குணராஜ் கூறினார்.

மூன்று டன் லோரி மற்றும் எட்டு நான்கு சக்கர இயக்க வாகனங்களில் 20 பேர் கொண்ட குழுவினர் கடந்த வெள்ளியன்று ச்சா நகருக்கு பயணம் மேற்கொண்டோம். பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொருள்களை விநியோகிக்கும் பணியில் ச்சா டத்தோ ரவிசங்கர், பாகோ சுப்ரா போன்ற வட்டார பிரமுகர்களும் உதவி நல்கினர் என்றார் அவர்.

## தாமான் டெம்ப்ளர் தொகுதியில் 506 பேர் பிங்காஸ் திட்டத்தில் மாதம் வெ.300 பெறுகின்றனர்



ஷா ஆலம், தாமான் டெம்ப்ளர் தொகுதியைச் சேர்ந்த வசதி குறைந்த 506 பேர் மாநில அரசின் சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் (பிங்காஸ்) கீழ் மாத 300 வெள்ளி பெறுகின்றனர்.

கடந்தாண்டு ஜூலை மாதம் முதல் இவ்வாண்டு ஜனவரி வரை இந்த தகுதி உள்ள பயனாளிகளுக்கு இந்த திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுவதாக தொகுதி சேவை மையத்தின் அதிகாரி ரோஸ்லி கமாருடின் கூறினார்.

இந்த பிங்காஸ் திட்டத்திற்கு கடந்தாண்டு ஜூன் மாதம் முதல் இவ்வாண்டு தொடக்கம் வரை 1,530 விண்ணப்பங்கள் பெறப்பட்ட வேளையில் அவற்றில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த 506 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மாதம் 3,000 வெள்ளிக்கும் கீழ் வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பள்ளிச் செல்லும் வயதுடைய பிள்ளைகளை அதிக எண்ணிக்கையில் கொண்டவர்கள், மத்திய மற்றும் மாநில அரசின் துறைகளிடமிருந்து உதவி பெறாதவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படுகிறது என்றார் அவர்.

முன்பு அமலில் இருந்த கிஸ் எனப்படும் ஸ்மார்ட் சிலாங்கூர் அன்னையர் பரிவுத் திட்டம் மற்றும் தனித்து வாழும் தாய்மார்களுக்கான கிஸ் திட்டம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு 10 கோடியே 80 லட்சம் வெள்ளி நிதியில் இந்த பிங்காஸ் திட்டத்தை மாநில அரசு அமல்படுத்தியுள்ளது.

## 3,500 மாணவர்கள் பள்ளிக்குத் திரும்பும் உதவியாக RM100 பெறுவர் - பாயா ஜாராஸ் தொகுதி

**சுங்கை பூலோ,** பாயா ஜாராஸ் தொகுதியில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த (B40) மொத்தம் 3,500 மாணவர்கள் RM100 பள்ளிக்குத் திரும்ப உதவி பெறுவர்.

முதல் கட்டமாக 800 வவுச்சர்கள் வழங்கப்படும் என அதன் பிரதிநிதி கைருடின் ஒத்மான் தெரிவித்தார்.

"முதல் கட்டமாக நாங்கள் 800 வவுச்சர்களைப் பெறுநர்களுக்கு வழங்குவோம், இரண்டாவது கட்டமாகத் தாமான் சௌஜானா உதாமாவில் வவுச்சர்கள் வழங்கப்படும்.

இளம் தலைமுறை எஸ்கோ, பாயா ஜாராஸ் தொகுதியில் நிகழ்ச்சியை வெற்றியடையச் செய்வதற்காக RM200,000 ஒதுக்கப்பட்டதாக கூறினார்.

ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகளுக்குப் பள்ளிக்குச் செல்லும் உதவித் தொகை வழங்கப்பட்டதாகவும், அதிகமான சிலாங்கூர் குடிமக்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவதை உறுதி செய்வதற்காகவே இந்த விதி உருவாக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

"நாங்கள் பொதுமக்களிடமிருந்து மிகவும் ஊக்கமளிக்கும் அளவில் ஆதரவைப் பெற்றோம். ஆனால் B40 குழுவிற்கும், சமீபத்திய திடீர் வெள்ளத்தால்



பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கிறோம்.

"RM4,000 குடும்ப வருமானம் கொண்டவர்கள், ஆனால் பல குழந்தைகளை உடையவர்கள் பள்ளிக்குத் திரும்புவதற்கான உதவியைப் பெறுவதையும் நாங்கள் பரிசீலிப்போம்," என்று அவர் கூறினார்.



## மக்கள் நலனில் அக்கறை காட்டுவதில் சிலாங்கூரே சிறந்த மாநிலம், நிறைய உதவிகள் கிடைக்கின்றன

ஷா ஆலம், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை எல்லா மக்களின் நலனிலும் அக்கறை காட்டுவதில் சிலாங்கூரே சிறந்த மாநிலமாக உள்ளதாகப் பண்டார் உத்தாமா மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் ஜமாலியா ஜமாலுடின் புகழ்ந்துரைத்தார்.

மாநிலத்தின் மக்களுக்கு பல்வேறு திட்டங்களைக் குறிப்பாக 46 இல் திசம் சிலாங்கூர் பென்யாயாங் (ISP) தொகுப்பில் ஒழுங்கமைப்பின் மூலம் இதைக் காணலாம். "இதில் இலவச தண்ணீர், இலவச தடுப்பூசிகள், சட்ட உதவி, சுகாதாரப் பரிசோதனை, இணையத் தரவு, சிலாங்கூர் ஸ்மார்ட் பஸ், ஆலோசனை மற்றும் குறிப்பிடப்படாத பலவற்றை இந்த 46 திட்டங்களில் உள்ளடக்கவில்லை. இதைக் கொண்டு "சிலாங்கூர் என்ற மாநிலத்தில் பிறந்த ஒருவர் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை ஒருவர் அறிந்து கொள்ளலாம். மாநிலத்தின் பல்வேறு துறைகள் முன்னெடுத்துள்ள அம்சங்களின் தொழில்முனைவு, விவசாயம், டிஜிட்டல் மயமாக்கல், காலநிலை மாற்றம் போன்ற பிற துறைகளும் கணக்கில் இல்லை" என்று அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநிலச் சட்டசபையில் நேற்று நடைபெற்ற சிலாங்கூர் சுல்தான் ஷராபுதீன் இத்ரிஸ் ஷா அல்ஹாஜ் நிகழ்த்திய அரச உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் போது அவர் இவ்வாறு கூறினார்.

## 357 குடும்பங்கள் பிங்காஸ் திட்டத்தின் மூலம் மாதாந்திர RM300 க்கான உதவியைப் பெற்றன

சுங்கை துவா தொகுதியில் மொத்தம் 357 குடும்பங்கள் இந்த ஆண்டு ஸ்கீம் பந்துவான் கெயிடுபான் செஜாத்ரா சிலாங்கூர் (பிங்காஸ்) திட்டத்தின் மூலம் மாதாந்திர RM300 க்கான உதவியைப் பெற்றன.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் மீது கவனம் செலுத்தப்படுவதாகச் சமூகச் சேவை மைய அதிகாரி மைமோன் மிஸ்மான் தெரிவித்தார்.

"இன்னும் பலர் விண்ணப்பிக்க விரும்புகிறார்கள், ஆனால் RM3,000க்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்.

"ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இதனால் அதிகமான குடும்பங்களுக்கு உதவ முடியும்," என்று அவரைச் சந்தித்தபோது கூறினார்.

இல்திசம் சிலாங்கூர் பென்யாயாங்கின் 44 ஊக்கத்தொகைகளின் ஒரு பகுதியாக இருக்கும் இந்த திட்டம், "Wavpay e-wallet "பயன்பாட்டின் மூலம் மாதத்திற்கு RM300 அல்லது வருடத்திற்கு RM3,600யை வழங்கும்.



# கம்போங் டத்தோ ஹருண்

## வீட்டுடமைப் பிரச்சனைக்குத் தீர்வு




பெட்டாலிங் ஜெயா, இங்குள்ள கம்போங் டத்தோ ஹருண், பி.ஜே.எஸ்.1 பகுதியைச் சேர்ந்த 249 குடும்பங்களைக் கடந்த 15 ஆண்டுகளாக எதிர்நோக்கி வந்த குடியேற்றுப் பிரச்சனை மாநில அரசின் முயற்சியால் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டது.

மேம்பாட்டாளருடன் காணப்பட்ட இரு தரப்புக்கும் பாதகமில்லாத் தீர்வின் விளைவாக அந்த குடியேற்றவாசிகள் விவேக வாடகைத் திட்டத்தின் மூலம் வீடுகளைப் பெற்றதாக மந்திரி புசார் கூறினார். வாடகைக் கொள்முதல் கொள்கையின் அடிப்படையில் அவர்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்பட்டது. தொடக்கத்தில் வாடகைக்கு இருந்து பின்னர் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி குறிப்பிட்டார்.

இந்த இரண்டு கட்டத் விவேக வாடகைத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வாடகைக்கு இருந்து வீட்டின் முழு உரிமையைப் பெறலாம். செலுத்தப்பட்ட வாடகைத் தொகையில் 30 சதவீதம் முன்பணத்தில் சேர்க்கப்பட்டு மீதமுள்ள தொகையைத் தவணைகளில் செலுத்த வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.



## சிலாங்கூர் கூ வீடுகளுக்கு 120,000 விண்ணப்பங்கள்

### - நிர்ணயித்த இலக்கை விட இரு மடங்கு அதிக வரவேற்பு

சிப்பாங், சிலாங்கூர் கூ வீடுகளுக்கு விண்ணப்பம் செய்துள்ள சுமார் 120,000 பேரின் பட்டியலை சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியம் கொண்டுள்ளது.

வரும் 2025ஆம் ஆண்டு-வாக்கில் 60,000 கட்டுபடி விலை வீடுகளைக் கட்டுவதற்கு மாநில அரசு நிர்ணயித்துள்ள இலக்கைக் காட்டிலும் இந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை இரு மடங்குஅதிக-மாகும் என்று வீடமைப்புத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார். இந்த பிரிவு வீடுகள் குளிசாதனம், தொலைக்காட்சி, சமையலறை கேபினட், குளிர்பதனப் பெட்டி ஆகிய வசதிகளை கொண்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த ஈராண்டுகளில் 42,000 ரூமா இடாமான் வீடுகளை நிர்மாணிக்க முடியும் என நாங்கள் நம்புகிறோம். இந்த வீடமைப்புத் திட்டங்கள் பாதியில் கைவிடப்படாமலிருப்பதை உறுதி செய்யும்படி மேம்பாட்டாளர்களை கேட்டுக் கொள்கிறேன் என்றார் அவர்.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் இதுவரை 65,000 சிலாங்கூர் கூ மற்றும் ஹராப்பான் வீடுகளை நிர்மாணிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த பிப்ரவரி மாதம் கூறியிருந்தார்.



## இலவசக் குடிநீர்த் திட்டம்

### பயனாளிகளின் வருமான வரம்பை 6,000 வெள்ளியாக உயர்த்த சிலாங்கூர் அரசு திட்டம்

சபாக் பெர்ணம், இருபது கனமீட்டர் நீரை இலவசமாகப் பெறுவதற்கான குறைந்த பட்ச குடும்ப வருமான வரம்பை 6,000 வெள்ளியாக உயர்த்துவதற்கான சாத்தியத்தை சிலாங்கூர் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்த டாருள் ஏசான் இலவச குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக மாநிலத்திலுள்ள ஆறு லட்சம் குடும்பங்கள் பயனடைவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அடிப்படை வசதிகள் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இந்த திட்டத்திற்கு இதுவரை குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளன. சிலாங்கூர் மாநிலத்தின் வறுமைக் கோட்டு அளவு 6,000 வெள்ளியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இத்திட்ட விண்ணப்பதாரர்களின் வருமான வரம்பையும் உயர்த்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தை மக்களிடம் அறிமுகப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும்-பொதுமக்களிடமிருந்து அதற்கு குறைவான ஆதரவே கிடைத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பெறக்கூடிய 11.00 வெள்ளி கழிவுத் தொகை என்பது சிறியதாக அவர்களுக்கு தோன்றலாம் அல்லது அந்த சலுகையை பிறர் பெறட்டும் என்ற பெருந்தன்மை காரணமாக இருக்கலாம் என்றார் அவர்



## திருமணமாகாதோரும் சொந்த வீடு பெறும் வகையில்

### சிலாங்கூர்கூ வீட்டுடைமைக் கொள்கை மறுசீரமைப்பு

ஷா ஆலம், சிலாங்கூர்கூ 3.0 வீட்டுடைமைக் கொள்கையின் அமலாக்கம் திருமணமாகாதோர் மற்றும் திருமணமானவர்கள் சொந்த வீட்டைப் பெறுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

வீடு வாங்குவது தொடர்பான நடைமுறை தொடர்பில் ஏற்படக்கூடிய கூடுதல் நிதிச் செலவினத்தை குறைப்பது உள்ளிட்ட அம்சங்களை இந்த கொள்கை உள்ளடக்கியுள்ளது என்று வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

மேம்பாட்டு மண்டலம், விபரக்குறிப்புகள், கட்டுப்பாடு மற்றும் மூன்று அறை தொடர்புடைய முந்தைய சிலாங்கூர்கூ திட்டங்களைப் புதியக் கொள்கை உள்ளடக்கியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். மக்கள் தொகை அதிகம் உள்ள பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளவும் 35 வயதுக்கும் கீழ்ப்பட்டவர்களுக்குக் குறிப்பாக திருமணமாகாதவர்கள் அல்லது புதிதாகத் திருமணமானவர்களுக்குப் பிரத்தியேகத் திட்டத்தை அமல்படுத்தவும் இப்போது நாம் அனுமதி வழங்குகிறோம் என்று அவர் மேலும் சொன்னார்

மாநிலச் சட்டமன்றத்தில் இன்று ஜெராம் உறுப்பினர் முகமது சாயிட் ரோஸ்லி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த புதிய கொள்கையின் கீழ் சிலாங்கூர்கூ வீடுகள் 250,000 வெள்ளிக்கும் குறைவாக இருப்பது உறுதி செய்யப்படுவதோடு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் உரிமை மாற்றச் செலவினமும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றார் அவர்.

இது தவிர, பராமரிப்புச் செலவுகளும் ஈராண்டுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதனால் வீடு வாங்குவோர் கூடுதல் செலவினம் குறித்து கவலைப்படவேண்டியதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

# பத்து ஆராங் நகரின் தனித்துவத்தை பாதுகாக்க மாநில அரசு உறுதி



ஷா ஆலம், பத்து ஆராங் நகரின் தனித்துவத்தைப் பாதுகாக்க மாநில அரசு கடப்பாடு கொண்டுள்ளது. 2030 பண்டார் பத்து ஆராங் சிறப்பு குடியேற்றப் பகுதி திட்டத்தின் ஆர்.கே.கே.) கீழ் இந்நகரின் பாரம்ரியம் தொடர்ந்து கட்டிக்காக்கப்படும் என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

பத்து ஆராங் மஸ்ஜிட் ஜாமேக் பள்ளிவாசலைப் பாதுகாப்பது தொடர்பான பரிந்துரையும் அந்த விவாதத்தில் முன்வைக்கப்பட்டதாகவும், கடந்தாண்டு அக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட 2030 பண்டார் பத்து ஆராங் திட்ட வரைவை காட்சிக்கு வைக்கும் பணிக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் அடுத்தக் கட்ட நடவடிக்கையாக இந்த செயல்குழு கூட்டம் அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

செலாயாங் நகராண்மைக் கழகத்தின் துணைத் தலைவர் அடி பைசால் அகமது தர்மிஸி மற்றும் பிளான் மலேசியாவின் சிலாங்கூர் மாநில இயக்குநர் கமாருள்ஸமான் இப்ராஹிம் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் ஏழு ஆட்சேபங்களும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பாரம்பரிய நகராக விளங்கும் இந்த பத்து ஆராங் நகரில் சுரங்க நடவடிக்கைகள் நடைபெற்றதற்கு சான்றாக சுரங்கப் பாதைகள், புகைப்போக்கிகள் மற்றும் சிதிலமடைந்த பழைய கட்டிடங்களை இன்றளவும் காண முடியும்.

## கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் சிறந்த சேவைக்கான விருதை
### 17 இந்தியர்கள் உள்பட 127 பேர் பெற்றனர்

கிள்ளான், கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் 2022 ஆம் ஆண்டு சிறந்த சேவைக்கான விருதளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை இங்குள்ள டேவான் ஹம்சாவில் நடைபெற்றது.

நகராண்மைக் கழகத் தலைவர் நோராய்னி ரோஸ்லான் தலைமையில் நடைபெற்ற இந்த விருதளிப்பு நிகழ்வில் 17 இந்தியர்கள் உள்பட 127 பேர் சிறப்பு சேவைக்கான விருதைப் பெற்றன இந்த விருதைப் பெற்றவர்களில் ப.பாண்டியன், எஸ். வீரன், ஆர்.கருணாகரன், தங்கராஜு, சிவஞானம், கே.கணபதி, கே.முத்துப்பாண்டியன், எஸ்.சிவஜோதி, ஆர்.ரகு, கனகராஜா, எம். மதன், எம்.சேகர், தனபாலு, எஸ்.சுப்பையா, எஸ்.இந்திரா, பி.காமினி, லோகேஸ்வரி, ஆகியோரும் அடங்குவர்.

இந்த விருதளிப்பு நிகழ்வில் உரையாற்றிய நோராய்னி, கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்கினை ஆற்றி வரும் ஊழியர்களை அங்கீகரிக்கும் விதமாக இந்த நிகழ்வு ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

விருது பெற்ற அனைத்து ஊழியர்களும் தொடர்ந்து முழு கடப்பாடுடன் தங்கள் சேவையை ஆற்றி வரும் அதேவேளையில் நகராண்மைக் கழகத்தின சேவைத் தரத்தை உயர்த்தும் விதமாக உயர்நெறி, திறன் மற்றும் சிறப்பான சேவை அணுகுமுறையைக் கடைபிடிப்பர் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் இருவருக்கு நகராண்மைக் கழகத் தலைவரின் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டதோடு பணி ஓய்வு பெறும் 25 பேரும் கௌரவிக்கப்பட்டனர் என்றார் அவர்.




## பெ.ஜெயா செக்சன் 14, சுங்கை பெஞ்சாலா நடைபாதை பொது மக்களுக்குத் திறக்கப்பட்டது



ஷா ஆலம், பெட்டாலிங் ஜெயா, செக்சன் 14 பகுதியில் உள்ள சுங்கை பெஞ்சாலா ஆற்றோர பொழுதுபோக்கு நடைபாதை நேற்று பொது மக்களுக்குத் திறக்கப்பட்டது.

சுமார் 700 மீட்டர் நீளம் கொண்ட இந்த ஆற்றோர நடைபாதையை நிர்மாணிக்கும் பணி கடந்தாண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டு கடந்த மாதம் இறுதியில் முற்றுப் பெற்றதாக புக்கிட் காசிங் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர். ராஜீவ் கூறினார்.

ஆசியா ஜெயா எல்.ஆர்.டி. நிலையத்தையும் பெட்டாலிங் ஜெயா செக்சன் 19 வர்த்தக மையத்தையும் இந்த நடைபாதை இணைக்கிறது என்று அவர் குறிப்பட்டார்.

முதன் முறையாக அமல்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தை மாநில வடிகால் மற்றும் நீர்பாசனத் துறை 409,000 வெள்ளிச் செலவில் மேற்கொண்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த நடைபாதை செக்சன் 19இல் இருந்து செக்சன் 14 மில்லினியம் ஸ்குவெயர் வரைக்குமான பகுதியை இணைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

## கிள்ளானில் சாலைகள், வடிகால்களைத் தரம் உயர்த்த வெ.40 லட்சம் ஒதுக்கீடு - நாடாமன்றத்தில் தகவல்

ஷா ஆலம், கிள்ளான் வட்டாரத்தில் 42 சாலை சீரமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள கிள்ளான் நகராண்மைக் கழகத்திற்கு கடந்த 2020ஆம் ஆண்டு முதல் 23 லட்சத்து 30 ஆயிரம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வட்டாரத்தில் 21 வடிகால்களை தரம் உயர்த்தும் திட்டங்களை மேற்கொள்வதற்காக அந்த நகராண்மைக் கழகத்திற்கு மேலும் 17 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி ஒதுக்கப்பட்டதாக ஊராட்சி மன்ற மேம்பாட்டுத் துறை அமைச்சர் நா கோர் மிங் கூறினார்.

கிள்ளான் இன்னும் நகராண்மைக் கழக அந்தஸ்தைக் கொண்டுள்ளது. சீரான சாலைகள் மற்றும் கால்வாய் வசதிகளை முறையாகப் பராமரிப்பதன் மூலம் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் அமைச்சு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களவையில் நேற்று 2023ஆம் ஆண்டிற்கான விநியோகச் சட்ட மசோதா மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் கூறினார்.





## இரு இடங்களில் உருவாகி ஓரிடத்தில் சங்கமித்த திருத்தலம்

# ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயம்

## ஆலம் மேகா

**ஷா ஆலம்** மாநகரில் உள்ள ஆலம் மேகா மற்றும் ஹைக்கோம் வட்டார இந்துக்களின் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலமாக விளங்குவது தாமான் ஆலம் மேகா ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயமாகும்.

இரண்டு தோட்ட வழிபாட்டுத் தலங்களின் ஒருங்கிணைந்த வடிவமாக விளங்கும் இந்த ஆலயம் சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பிரமாண்ட ராஜகோபுரத்துடன் காட்சியளிக்கிறது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் புரோட்டோன் கார் நிறுவனத்தை அமைப்பதற்காக ஷா ஆலம் மற்றும் சுபாங் ஜெயா இடையே இருந்த லாபுவான் பாடாங் மற்றும் டாமன்சாரா தோட்டங்களும் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

எண்பதாம் ஆண்டுகளில் ஹைக்கோம் கனரக தொழில்பேட்டை இங்கு உருவான போது அவ்விரு தோட்டங்களிலும் வசித்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தார்கள். தமிழ்ப்பள்ளிகளும் ஆலயங்களும் ஒன்றோடொன்று இணைந்தன அல்லது அடையாளம் தெரியாமல் மறைந்தன.

தோட்ட முன்னோடிகளின் பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு இந்த ஆலயம் இரு முறை இடமாற்றம் கண்டு தற்போது ஷா ஆலம், செக்சன் 28, தாமான் ஆலம் மேகாவில் பிரமாண்ட தோற்றத்தில் காட்சியளிக்கிறது. சுமார் 143 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இந்த ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆலயத்தின் அறங்காவலர் எஸ்.ஜெயசீலன் இவ்வாறு விவரிக்கிறார்.

ஹைக்கோம் அமைந்துள்ள இந்த ஆலயம் லாபுவான் பாடாங் தோட்ட ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயம் மற்றும் டாமன்சாரா தோட்ட ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட வடிவமாகும்.

1889ஆம் ஆண்டில் உருவான ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயத்தை தோட்ட மக்களும் கங்காணிமார்களும் செவ்வனே வழி நடத்தின வந்தனர். கால மாற்றமும் நாடு கண்ட முன்னேற்றமும் இந்த தோட்டத்திற்கும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியது. கடந்த 1982ஆம் ஆண்டு ஹைக்கோம் தொழில்பேட்டையின் ருவாக்கத்திற்காக டாமன்சாரா தோட்டமும் லாபுவான் பாடாங் தோட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவ்விரு ஆலயங்களையும் ஒருங்கிணைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இந்நிலையில் நிலையான மாற்று இடம் கேட்டு மேம்பாட்டாளர்களிடம் நாங்கள் தொடர்ந்து மனு செய்து வந்தோம் என்று அக்காலக்கட்டத்தில் ஆலயத்தின் செயலாளராக இருந்த வந்த ஜெயசீலன் குறிப்பிட்டார்.

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் திரு.முத்து தலைமையிலான ஆலய நிர்வாகத்தினரும் இடைவிடாது மேற்கொண்டு நடவடிக்கையின் வாயிலாக 1987ஆம் ஆண்டில் ஹைக்கோம் பெர்சியாரான் கிளாங் பகுதியில் தற்காலிமாக மாற்று இடம் வழங்கப்பட்டதோடு ஒவ்வொரு ஆலயத்திற்கும் இழப்பிடாக தலா 30,000 வெள்ளியும் வழங்கப்பட்டது.

காலப்போக்கில் அந்த நிலமும் நெடுஞ்சாலை திட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1998ஆம் ஆண்டில் ஆலயம் தற்போது அமைந்துள்ள ஆலம் மேகா, பெர்சியாரான் பகுதியில் அரை ஏக்கர் நிலம் மீண்டும் தற்காலிகமாக வழங்கப்பட்டு வழிபாட்டிற்காக சிறிய அளவில் ஆலயமும் அமைக்கப்பட்டது.

எனினும் பல கட்டப் போராட்டத்திற்குப் பின்னர் இந்த இடம் ஆலயத்திற்கு நிரந்தரமாக நிலை நிறுத்தப்பட்டதோடு நிலத்தின் பரப்பளவும் அரை ஏக்கரிலிருந்து ஒரு ஏக்கராக அங்கீகரிக்கப்பட்டு அரசு பதிவேட்டில் ஆர்ஜிதமும் செய்யப்பட்டது என ஜெயசீலன் தெரிவித்தார்.

சுமார் 8 லட்சம் வெள்ளி செலவிலான இந்த ஆலயத்தை நிர்மாணிக்கும் பணி கடந்த 1999ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. பின்னர் ஆலயத் தலைவராக நான் பொறுப்பேற்றப் பின்னர் ஒரு லட்சம் வெள்ளி செலவில் 800 பேர் அமரக்கூடிய மண்டபம் அமைக்கப்பட்டதோடு வசந்த மண்டபம், சிவன், காலபைவர் சன்னதிகள், அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2013ஆம் ஆண்டில் இரண்டாவது கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது என ஜெயசீலன் மேலும் கூறினார்.

பக்தர்களின் நன்கொடை, அர்ச்சனை சீட்டு விற்பனை மற்றும் மத்திய, மாநில அரசுகள் வழங்கிய நன்கொடைகள் மூலம் இந்த ஆலயத்தை இதுநாள் வரை தாங்கள் வழி நடத்தி வந்ததாக கூறிய அவர், கோவிட்-19 பெருந்தொற்றின் போது மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் ஏற்பாட்டில் இரு முறை இந்த ஆலயத்தில் வட்டார மக்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நடத்தப்பட்டது என்றார்.

இதனிடையே, அடுத்தாண்டு நடைபெற-விருக்கும் மூன்றாவது கும்பாபிஷேகேத்தை முன்னிட்டு ஆலயத்தை புனரமைப்பு செய்து பக்தர்களுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தரும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டு வருவதாக ஆலயத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள இ.எம். நாதன் கூறினார்.

இவ்வட்டார மக்களின் பிரதான வழிபாட்டுத் தலமாக மட்டுமின்றி சமூக மையமாகவும் இந்த ஆலயம் விளங்குவதை உறுதி செய்ய பல்வேறு சமூக நடவடிக்கை-களையும் மேற்கொள்ள தாங்கள் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இவ்வாலயத்தில் தேவாரம், டியூஷன் வகுப்பு, பாலர் பள்ளியை நடத்துவதற்கான திட்டமும் உள்ளது. அதனை அமல்படுத்தும் நடவடிக்கையில் நாங்கள் முழுவீச்சில் ஈடுபட்டு வருகிறோம் என்றார் அவர்.

## சதம் தொட்டுச் சாதனை படைத்

# சிலாங்கூரின் 100வது தமிழ்ப்பள்ளி



நம் நாட்டில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை குறைவும் மாணவர்கள் எண்ணிக்கை சரிவும் தமிழ்ப் பற்றாளர்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஆதங்கம் தரும் தரவுகளுக்கு மத்தியில் புதிதாக ஒரு பள்ளி பூத்திருக்கிறது என்றச் செய்தி நமக்கு புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது.

பெட்டாலிங் ஜெயா தாமான் கனகபுரத்தில் அமைந்துள்ள இந்த பி.ஜே.எஸ்.1 தேசிய வகைத் தமிழ்ப்பள்ளியின் உருவாக்கம் நாட்டிலுள்ள தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கையை 529ஆகவும் சிலாங்கூர் மாநிலப் பள்ளிகள் எண்ணிக்கையை 100ஆகவும் உயர்த்தியுள்ளது. வியக்கத்தகு தோற்றத்தில் பள்ளிக்குத் தேவையான அனைத்து அதிநவீன அடிப்படை வசதிகளையும் கொண்டிருக்கும் இப்பள்ளி வரும் மார்ச் 20ஆம் தேதி தொடங்கி செயல்பட்டு வருகிறது.

மூன்று மாடிகளைக் கொண்ட நான்கு கட்டிடங்களை உள்ளடக்கிய இந்த பள்ளி 24 வகுப்பறைகள், ஆசிரியர் அறை, கருவூல மையம், 40 கணினிகளுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப அறை, வழிகாட்டல் மற்றும் நெறியுரை அறை, சிற்றுண்டிச் சாலை, திரையிடல் அறை, இரு அறிவியல் அறைகள், நூலகம், சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றோடு மேசை, நாற்காலி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் முழுமையாகக் கொண்டுள்ளதாக கூறுகிறார் பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி இராஜலட்சுமி ராஜரத்தினம்.

மொத்தம் 3.6 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 1 கோடியே 90 லட்சம் வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப்பள்ளி அரசாங்கத்தின் முழு உதவி பெற்றப் பள்ளியாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 400 மாணவர்கள் வரை பயிலும் வசதி கொண்ட இப்பள்ளியில் தற்போது 50 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இப்பள்ளியின் சுற்றுவட்டாரத்தில் பெட்டாலிங் உத்தாமா மக்கள் குடியிருப்புத் திட்ட அடுக்குமாடி குடியிருப்பு உள்பட பல்வேறு மலிவு விலை அடுக்குமாடி வீடுகள் உள்ளன. இங்குள்ள பெற்றோர்கள் கூடிய விரைவில் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளியில் சேர்க்கும் பட்சத்தில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம் என அவர் சொன்னார்.

இந்த பள்ளியில் தற்போது 17 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். துடிப்புமிக்க அந்த ஆசியர் குழுவினர் மற்றும் சிறப்பான அடிப்படை வசதிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு சிறப்பான முறையில் போதனைகளை நடத்த முடியும் என நம்புகிறோம் என்றார் அவர்.

மாணவர்களை கல்வியில் மட்டுமின்றி, விளையாட்டு மற்றும் தனித்திறன் மேம்பாட்டிலும் கவனம் செலுத்த-விருக்கிறோம். சுற்றுவட்டார பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சிறப்பான எதிர்காலம் கருதி தமிழ்ப்-பள்ளியில் குறிப்பாக இப்பள்ளியில் அவர்களைச் சேர்ப்பார்கள் என பெரிதும் எதிர்பார்க்கிறோம் என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த பி.ஜே.எஸ்.1 தமிழ்ப்பள்ளி நாற்பது ஆண்டுகளுக்கும் முந்தைய வரலாற்றைக் கொண்டுள்ளதாக பள்ளியின் நடவடிக்கைக் குழுச் செயலாளர் மணிவேல் தெரிவித்தார். அக்காலக்கட்டத்தில் மலாய், சீன மற்றும் தமிழ்ப்பள்ளிகளுக்கு நிலம் வழங்கப்பட்ட நிலையில் சீனப்பள்ளி மட்டும் விரைவாக கட்டிடத்தைக் கட்டி செயல்படத் தொடங்கியது.

மற்ற இரு பள்ளிகளுக்கான நிலங்களும் காலியாக இருந்த நிலையில் சட்டவிரோத குடியிருப்புகள் அங்கு தோன்ற ஆரம்பித்தன என்று அவர் சொன்னார். கடும் போராட்டத்திற்குப் பின்னர் அக்குடியிருப்புகள் அகற்றப்பட்டன. இந்நிலையில் கடந்த 2012ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் அறிவித்த ஆறு புதிய தமிழ்ப்பள்ளிகளில் இப்பள்ளியும் இடம் பெற்றிருந்தது.

எனினும், 2018ஆம் ஆண்டில்தான் கட்டுமானத்திற்கான முழு அங்கீகாரம் கிடைத்த நிலையில் அதற்குள் அங்கு சிலர் கடைகளை அமைத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டனர். அரும்பாடுபட்டு அவர்களை அப்புறப்படுத்தியப் பின்னர் 2019ஆம் ஆண்டு பூமி பூஜை நடத்தப்பட்டது.

இடையில் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக கட்டுமானப் பணிகள் தடைபட்டு கடந்த 2022 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் முழுமைப் பெற்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பள்ளியின் உருவாக்கத்திற்கு சிலாங்கூர் மாநில முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ வி.எல்.காந்தன் தலைமையிலான பள்ளி நடவடிக்கை குழு பெரும் பங்காற்றியதை யாரும் மறுக்க இயலாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய பள்ளித் தவணையில் தொடங்-கவிருக்கும் இப்பள்ளியில் சுற்று வட்டார இந்தியர்கள் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்து இப்பள்ளியின் வளர்ச்சிக்கு உதவுவார்கள் என தாங்கள் பெரிதும் எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**

*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*

# வெள்ளத் தடுப்பு திட்டங்கள் மறுஆய்வு
## அதே நிதியில் அதிகத் திட்டங்களை மேற்கொள்ள வாய்ப்பு

வெள்ளத்தைத் தடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட 1,500 கோடி வெள்ளியில் அமல் செய்யப்படவிருந்த திட்டங்களை மறுஆய்வு செய்ததன் விளைவாக அதே நிதியில் மேலும் அதிகமானத் திட்டங்களை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்த திட்டங்களின் அளவு மற்றும் அதற்கான நிதியை கணக்கிட்டால் எட்டு அல்லது ஒன்பது வெள்ளத் தடுப்புத் திட்டங்களை மட்டும் தான் அமல் செய்ய முடியும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

காழ்ப்புணர்வின் காரணமாகவோ பிறரின் குறை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகவோ நான் இதனைக் கூறவில்லை. அரசாங்கப் பணத்தைக் காப்பாற்றி மக்களுக்கே திரும்ப வழங்க வேண்டும் என விரும்புகிறேன். பிரதமர் என்ற முறையில் இது எனது பணியாகும் என்றார் அவர்.

நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர் முறையின் வழி இதனை மேற்கொண்ட போது இரண்டு அல்லது மூன்று திட்டங்களைக் கூடுதலாக மேற்கொள்ள முடிந்தது. ஜோகூர் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு வெள்ளத் தடுப்பு திட்டத்தை நான் இரண்டாக அதிகரித்துள்ளேன். ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அதே நிதியைகொண்டு, ஆனால் அதை நாம் திறனுடனும் வெளிப்படை போக்குடனும் நிர்வகித்தோம். இதில் எந்த மோசடியும் நிகழவில்லை என்று அவர் சொன்னார்.

இதனிடையே, அரசாங்கம் நாட்டு மக்களின் நலனை தொடர்ந்து காத்து வரும் என்றும் தவுக்கைகளும் பணக்கார நிறுவனங்களும் வரி செலுத்துவதில் இருந்து தப்புவதை ஒருபோதும் அனுமதிக்காது என்று நிதியமைச்சருமான அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

ஏழ்மையை களைவதில் ஊராட்சி மன்றங்கள் கவனம் செலுத்த வேண்டும்- பிரதமர்

நகர்புற திட்டமிடலின் போது எழும் பிரச்சனைகள் அடையாளம் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதில் முனைப்பு காட்டும் படி அனைத்து ஊராட்சி மன்றங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நகர்ப்புற மக்களின் தேவையை நிறைவு செய்வதற்கு ஏதுவாக சமநிலையான மேம்பாட்டை உறுதி செய்ய இந்நடவடிக்கை அவசியமாகிறது என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். முன்பு மேம்பாட்டை மட்டுமே குறிக்கோளாக கொண்டிருந்த காரணத்தால் நகர்ப்புற திட்டமிடலில் பல்வேறு பலவீனங்கள் காணப்பட்டன என்று அவர் சொன்னார். நாம் அழகிய கட்டிடங்கள் நிர்மாணிக்கிறோம். நாட்டின் மேம்பாட்டிற்கு பெரிய திட்டங்கள் தேவைதான். ஆனால் அதில் வேலை செய்வோருக்கும் (மக்கள்) வீடு தேவை என்பதை நாம் மறந்து விடுகிறோம். அவர்களுக்கு மலிவு விலை வீடுகளை நிர்மாணிக்க நாம் முனையும் போது நிலத்தின் விலை உயர்ந்து விடுகிறது என்று அவர் சொன்னார்.

தமது சிந்தையில் உருவான "மலேசியா மடாணி" என்னும் நாகரீக மலேசியா கோட்பாடிற்கேற்ப பெரிய நகரங்கள் முறையாக திட்டமிடலைக் கொண்டிருக்க வேண்டும் என்று நிதி அமைச்சருமான அவர் குறிப்பிட்டார்.



# இன, மத உணர்வுகளை பயன்படுத்தி தேசிய பாதுகாப்புக்கு
## அச்சுறுத்தலாக இருந்தால் கடும் நடவடிக்கை

மலேசியா இணக்கமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், சமய, இனவாதங்களை தூண்டும் செயல்களை அனுமதிக்க கூடாது என்றும், தேசிய பாதுகாப்பை சீர்குலைக்கும் முயற்சிகளை தனது தரப்பு பொறுத்துக்கொள்ளாது என்றும் கூறினார்.

"இந்த நாட்டில் இனம் மற்றும் மதத்தின் பெயரால் சூடேற்றி, குழி பறிக்க முயற்சிக்கும் எவரின் எந்த முயற்சியும் அனுமதிக்கப்படாது.

"பாதுகாப்புப் படைகளை விழிப்புடன் இருக்கும்படி நான் அறிவுறுத்தியுள்ளேன், ஏனென்றால் அவநம்பிக்கையான அல்லது சவாலை எதிர்கொள்ள சக்தியற்றவர்கள் இந்த உணர்வைப் பயன்படுத்துவார்கள் மற்றும் ஏதேனும் குழப்பத்தை ஏற்படுத்த ஏழை மக்களும் பணியமர்த்தப் படலாம்," என்று கூறினார்.

அதிகாரத்தை இழந்த சில கட்சிகள் இன, மத உணர்வுகளைத் தூண்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகக் கூறினார்.

இன மற்றும் மத உணர்வுகளை உள்ளடக்கிய எந்த ஒரு பிரச்சினையும் பகைமை அல்லது தவறான எண்ணத்தை உருவாக்குவதற்கு பதிலாக பேச்சுவார்த்தை செயல்முறை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் விளக்கினார்.

# அனைத்து இன மக்களின் நலன்களையும்
## கெ அடிலான் கட்சி காக்கும்- அன்வார் உறுதி

மலாய்க்காரர்கள் மற்றும் இஸ்லாத்தின் உரிமைகளுக்கு பாதிப்பு வராத வகையில் இன, சமய வேறுபாடின்றி அனைத்து இன மக்களின் நலன்களையும் கெ அடிலான் கட்சி காக்கும் என உறுதியளிக்கப்பட்டது. பொது மக்களுக்கு குறிப்பாக விவசாயிகள் மற்றும் சிறுதோட்டக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்ட ஏராளமான உதவித் திட்டங்கள் மூலம் இந்த உண்மையை அறிய முடியும் என்று அக்கட்சியின் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.
நாங்கள்தான் உண்மையான மலாய் போராட்டவாதிகள். அரசாங்க பணத்தை எடுத்து சொந்தப் பாக்கெட்டில் போட்டுக் கொள்ளவில்லை. மக்கள் மற்றும் ஏழை விவசாயிகளின் நலனுக்காக நாங்கள் பாடுபடுகிறோம் என்று அவர் சொன்னார். மக்களின் நலனைக் காப்பதில் நாங்கள் முனைப்பு காட்டுகிறோம். தலைவர்களுக்கு கையூட்டு வழங்குவதற்காக அல்லது மக்களை வாங்குவதற்கு நாங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. நாங்கள் கொள்கையின் அடிப்படையில், அப்படிப்பட்டவர்களை எதிர்த்து போராடுகிறோம் என்று குறிப்பிட்டார்.

இன உணர்வுகளை தூண்டுவதற்கு அதிகாரம் பறிபோய் விட்டது எனக் கூற வேண்டாம். மூன்று ஆண்டுகள் அவர்கள் பதவியில் இருந்தார்கள். ஆர்.யு.யு. 355 எங்கே? கிளந்தான், திரங்கானு, பெர்லிஸ், கெடா வுக்கு மேம்பாடு நிதி எங்கே? என அவர் கேள்வி எழுப்பினார்.

ஏழ்மையை களைவதில் ஊராட்சி மன்றங்கள் கவனம் செலுத்த வேண்டும்- பிரதமர்

நகர்புற திட்டமிடலின் போது எழும் பிரச்சனைகள் அடையாளம் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதில் முனைப்பு காட்டும் படி அனைத்து ஊராட்சி மன்றங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நகர்ப்புற மக்களின் தேவையை நிறைவு செய்வதற்கு ஏதுவாக சமநிலையான மேம்பாட்டை உறுதி செய்ய இந்நடவடிக்கை அவசியமாகிறது என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். முன்பு மேம்பாட்டை மட்டுமே குறிக்கோளாக கொண்டிருந்த காரணத்தால் நகர்ப்புற திட்டமிடலில் பல்வேறு பலவீனங்கள் காணப்பட்டன என்று அவர் சொன்னார். நாம் அழகிய கட்டிடங்கள் நிர்மாணிக்கிறோம். நாட்டின் மேம்பாட்டிற்கு பெரிய திட்டங்கள் தேவைதான். ஆனால் அதில் வேலை செய்வோருக்கும் (மக்கள்) வீடு தேவை என்பதை நாம் மறந்து விடுகிறோம். அவர்களுக்கு மலிவு விலை வீடுகளை நிர்மாணிக்க நாம் முனையும் போது நிலத்தின் விலை உயர்ந்து விடுகிறது என்று அவர் சொன்னார்.

# நாடு பொருளாதார மந்த நிலையை சந்திக்காது



உலகளாவிய நிச்சயமற்ற சவால்களுக்கு மத்தியில் மலேசியாவின் பொருளாதாரம் இந்த ஆண்டு 4.5 சதவீதம் வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்று துணை நிதி அமைச்சர் கூறினார். கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சி, அனைத்துலக நிதியம் (ஐ.எம்.எஃப்.) மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் கணிப்புடன் இது ஒத்துப்போகிறது என்று டத்தோஸ்ரீ அகமது மஸ்லான் சொன்னார். இந்த ஆண்டும் நாடு பொருளாதார மந்த நிலையை சந்திக்காது என்பதோடு மலேசியாவை கவர்ச்சிகரமான முதலீட்டு இடமாக மாற்றுவதில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். இந்த ஆண்டு மலேசியா 4.4 சதவீதம் மற்றும் 4 சதவீதம் பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்யும் என்று ஐ.எம்.எஃப். மற்றும் உலக வங்கி கணித்துள்ளது என்று அவர் மக்களவையில் விளக்கினார். நுட்ப ரீதியிலான பொருளாதார மந்த நிலை என்பது ஒரு நாடு பொருளாதார மத்த நிலையை அதாவது தொடர்ந்து இரண்டு முறை எதிர்மறையான காலாண்டு வளர்ச்சியைப் பதிவு செய்யும் போது ஏற்படுவதாகும் என அவர் சொன்னார்.

## மலேசியாவில் அமேசான் முதலீடு - அரசியல் நிலைத்தன்மையின் அடையாளம்

அமேசான் வெப் செர்விசஸ் நிறுவனம் (ஏ.டபள்யூ.எஸ்.) மலேசியாவில் முதலீடு செய்வதற்கு நாட்டின் அரசியல் நிலைத்தன்மை மற்றும் தெளிவான கொள்கைகளேக் காரணம் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

வரும் 2037 ஆம் ஆண்டு வரை 2,550 கோடி வெள்ளியை முதலீடு செய்யும் அந்நிறுவனத்தின் திட்டம் முதலீட்டாளர்கள் மத்தியில் நாட்டின் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதில் உயரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நிதி அமைச்சருமான அவர் சொன்னார்.

முதலீடு தொடர்பா கடந்த 2019ஆம் ஆண்டு முதல் ஏ.டபள்யூ.எஸ் நிறுவனத்துடன் பேச்சு நடத்தப்பட்டு வந்தது. தெளிவான கொள்கைகளைக் கொண்ட நிலை தன்மையுடன் கூடிய நிர்வாகம் அமையும் வரை அத்தரப்பினர் காத்திருந்தனர் என்று அவர் குறிப்பிட்டார்.

பல ஆசியான் நாடுகள் ஏ.டபள்யூ.எஸ் நிறுவனத்திற்கு அழைப்பு விடுத்தன. ஆனால் அந்த நிறுவனம் மலேசியா-வைத்தான் தேர்ந்தெடுத்தது. இது நாட்டின் மீதான நம்பிக்கையை அதிகரிக்க செய்துள்ளதோடு மேற்கத்திய மற்றும் கிழக்கு நாடுகளில் உள்ள புதிய முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்குரிய சாத்தியத்தையும் உருவாக்கியுள்ளது என்றார் அவர்.

மக்களவையில் இன்று அமைச்சரிடம் கேள்விகள் எனும் அங்கத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்..மலேசிய முதலீட்டு செயற்குழு மற்றும் முதலீடு மீதான தேசிய செயல் குழுவின் உருவாக்கத்தின் வாயிலாக வகுக்கப்பட்ட புதிய முதலீட்டுக் கொள்கைக்கேற்ப இந்த ஏ.டபள்யூ.எஸ். நிறுவனத்தின் முதலீட்டின் மூலம் உயர் அறிவாற்றல் மிக்க வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும் அவர் சொன்னார்.

## இணைய நெட்வொர்க் அணுகலின் தரம் தொடர்பான பிரச்சனைகளை விரைவில் தீர்க்க உத்தரவு



நாடு முழுவதும் உள்ள இணைய நெட்வொர்க் அணுகலின் தரம் தொடர்பான பிரச்சனைகளை ஜூன் மாதத்திற்குள் தீர்க்க மலேசியத் தகவல் தொடர்பு மற்றும் பல்லூடக ஆணையம் (SKMM) உத்தரவிட்டுள்ளது.

எனவே, இந்த சிக்கலைச் சமாளிக்க நெட்வொர்க் பகிர்வு தொடர்பாகத் தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் அமைச்சர் ஃபஹ்மி ஃபட்சில் கூறினார்.

"சில சமயம் கிராமப் புறங்களில் இணையத் தரம் நன்றாக உள்ளது, ஆனால், சில சமயம் லைன் இல்லாமல் இரு தொலைப் பேசி களை உபயோகிக்க வேண்டிய நிலை உள்ளது.. இதில் பல தொலைத்தொடர்பு நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க முடியும்.

"எனவே மலேசியத் தகவல் தொடர்பு மற்றும் பல்லூடக ஆணையத்திற்கு நான் வலியுறுத்தியது, இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிந்தால் தரம் மற்றும் நெட்வொர்க் பகிர்வு சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்," என்று அவர் கூறினார்.

தொலைத் தொடர்பு நிறுவனங்களின் சேவை தரம் மட்டுமல்ல, பயனர்கள் அனுபவிக்கும் அனுபவத்தின் தரத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்படுவதை தனது தரப்பு உறுதி செய்யும் என்று அவர் கூறினார்.

# இரயில் நிலையங்களில் மின்தூக்கி வசதி வேண்டும்

புத்ராஜெயா, இரயில் நிலையங்களில் ஒரு வருடக் காலத்திற்குள் மின்தூக்கி பொருத்தப்பட வேண்டும், இன்னும் இந்த வசதி இல்லாதப் பெரிய இரயில் நிலையங்களுக்கு முதல் கட்டத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் அந்தோணி லோக் கூறினார்.

இன்னும் இந்த வசதி இல்லாத நிலையங்களில் மின்தூக்கிகள் அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்று இரயில்வே அசெட்ஸ் கார்ப்பரேஷன் (ஆர்.ஏ.சி) நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஏனெனில், இரயில் நிலையங்களில் மின்தூக்கி வசதி இல்லாததால், மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் சிரமத்திற்கு உள்ளாவதாக அடிக்கடி பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

"இன்னும் மின்தூக்கி வசதி இல்லாத இரயில் நிலையங்களுக்கு, ஒரு வருடத்திற்குள் இந்த வசதியைப் பெற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று அவர் இன்று ஆர்.ஏ.சி ஆல் உருவாக்கப்பட்ட ரயில்வே அசெட்ஸ் இன்டலிஜென்ஸ் சிஸ்டம் (RAILS) மொபைல் செயலியை இன்று இங்கு அறிமுகப்படுத்தியபோது கூறினார்.

வசதிகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய நிலையங்கள் குறித்து அமைச்சகத்திடம் அவசரமாகச் சமர்ப்பிப்பதற்காக, கெரேதாபி தனா மலாயு பி.எச்.டி (KTMB) உடன் இணைந்து அறிக்கையைத் தயாரிக்குமாறு ஆர்.ஏ.சி க்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக லோக் கூறினார்.

ஆர்.ஏ.சி தனது சொத்துக்களின் வாடகை வருவாயைக் கொண்டு, இரயில் நிலையங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்கான திறனும், நிதி ஆற்றலும் கொண்டுள்ளது என்றார்.



# கோல லங்காட் மாவட்ட நகராண்மைக்

**- கழக உறுப்பினர் கமலநாதன்**



கோல லங்காட், நீண்ட நாட்களாக கட்சி உறுப்பினராக இருந்தாலும் கடந்த 2018ஆம் ஆண்டு பொது தேர்தலுக்கு பின் தான் அதிக பொது விவகாரங்களில் குறிப்பாக கெ அடிலான் கட்சியை பிரதிநிதித்து சேவையாற்றி வந்ததாகவும், இதனால், அன்றைய கோலா லங்காட் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சேவியர் ஜெயக்குமார் தன்னை ஒரு தவணைக்கு கோல லங்காட் சிஜாங்காங் தொகுதியின் இந்திய கிராமத் தலைவராக நியமித்ததாக கூறினார்.

அதன்பின் ஏற்பட்ட சில அரசியல் மாற்றங்களால் தான் இந்திய கிராமத் தலைவர் பொறுப்பை ஏற்க வில்லை என்றும் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் ஏற்படுத்திய ஐ- சீட் என்னும் இயக்கத்தின் வழி தனது சேவைகளை தொடர்ந்ததாகவும் கூறினார்

ஐ-சீட் என்பது ஆர்வமும் திறமையும் உள்ள சிறு வியாபாரிகளை அடையாளம் காண்பது அவர்களுக்கு சில பொருள் உதவி மூலம் அவர்களின் வாழ்க்கை சிறக்க உதவுவதாகும். கோல சிலாங்கூர் மற்றும் சபாபெர்ணம் மாவட்டங்களில் 2 ஆண்டுகள் ஐ-சீட் அதிகாரியாக பணியாற்றியதாகவும் கூறினார்.

ஐ-சீட் திட்டத்தில் எல்லாம் நாங்களே என்பது அல்ல, இந்திய கிராத்தலைவர்கள் வழி ஆர்வமுள்ள சிறு வணிகர்களை, சுய தொழில் செய்பவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு மனுபாரங்கள் வழங்குவோம். அதில் கண்டுள்ள படி நிபந்தனைகளை நிறைவு செய்தால் பல ஆயிரம் வெள்ளி உதவிகளை பெறலாம். ஆனால், பாரங்களை சரியாக பூர்த்தி செய்து காலத்துடன் அனுப்பினால் மட்டுமே விண்ணப்பம் அடுத்த கட்ட பரிசீலனைக்கு போகும். ஆனால் 70 சதவீதத்தினர் அந்த விண்ணப்ப பாரங்களை முழுமையாக பூர்த்தி செய்து வழங்கப்பட்ட காலத்திற்குள் சமர்பிப்பதில்லை என்பது மிக வேதனை-யான உண்மை என தனது கடந்த கால அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

அவர், மேலும் கூறு கையில் சிலாங்கூரில் பிறந்த ஒரு மாத குழந்தை முதல் 80 வயதானவர் வரை இன்சான் திட்டத்தில் பதிந்து கொள்ளலாம். மரணம் ஏற்பட்டால் 10 ஆயிரம் வெள்ளி அதில் வழங்கப்படுகிறது. குழந்தைகள் பாலர் பள்ளிகளில் சேர்ந்தாலும் மாதம் 50 வெள்ளியுண்டு. தமிழ்ப்பள்ளிக்கு சென்றால் பயணக் கட்டணம் ஆண்டுக்கு 300 வெள்ளி, அதன்பின் உங்கள் பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் கல்வியை முடிக்கும் வரை பலவித உதவிகள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

அது போக சிலாங்கூர் கூ வீடுகளுக்கு , இலவச மருத்துவ பரிசோதனைகள், சில இலவச சிகிச்சைகள், இலவச தண்ணீர், அத்தியாவசிய பொருட்கள் சலுகை விலையில், வணிக உதவி, வியாபார கடன் இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம், அதற்கு நீங்கள் சிலாங்கூர் வாக்காளராக இருக்க வேண்டும், இத்திட்டங்களில் பங்குபெற நாம் முந்துகிறோமா, முயற்சிகிறோமா என்பது முக்கிய கேள்வி என்று தனது ஆதங்கத்தை கொட்டினார் கோல லங்காட் மாவட்ட நகராண்மைக் கழக உறுப்பினர் கமலநாதன்.



## தொழிலாளர் திறன் மேம்பாட்டுப் பிரிவின் அதிகார வரம்பு வலுப்படுத்தப்படும்

**கணபதிராவ் தகவல்**

ஷா ஆலம், இலக்கு நிர்ணயிக்கப்பட்டத் தரப்பினருக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சிலாங்கூர் தொழிலாளர் திறன் மேம்பாட்டுப் பிரிவின் (யு.பி.பி.எஸ்.) அதிகார வரம்பு வலுப்படுத்தப்படும்.

இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக மாநில தொழிலாளர் ஆலோசக மன்றத்தை அமைக்க வேண்டிய நிர்பந்தம் தற்போதைக்கு எழவில்லை என்று பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.

இந்நோக்கத்திற்காக யு.பி. பி.எஸ். பிரிவை வலுப்படுத்தினால் போதுமானது. எனினும் கால மாற்றத்திற்கேற்ப இவ்விவகாரத்தை தொடர்ந்தாற்போல் மறுபரிசீலனை செய்வது அவசியமாகும் என அவர் குறிப்பிட்டார்.

கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக வேலை இழந்தவர்கள் மறுபடியும் வேலை வாய்ப்பினைப் பெறுவதில் உதவும் நோக்கில் மாநில அரசு கடந்த 2021ஆம் ஆண்டு இந்த யு.பி.பி.எஸ். பிரிவைத் தோற்றுவித்தது.

இலக்கு நிர்ணயிக்கப்பட்டத் தரப்பினர் வேலை வாய்ப்பினை பெறுவதில் உதவுவதற்காக ஆள்பல இலாகா உள்ளிட்ட துறைகளுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தாங்கள் தயாராக உள்ளதாக கணபதிராவ் மேலும் குறிப்பிட்டார்.

## சிடேக் திட்டங்கள் வாயிலாக 33.4 கோடி வெள்ளி வருமானம்- சட்டமன்றத்தில் தகவல்



ஷா ஆலம், சிலாங்கூர் மாநில தகவல் தொடர்பு மற்றும் இலக்கவியல் பொருளாதார கழகம் (சிடேக்) கடந்த 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் நடத்தப்பட் நிகழ்வுகளின் வழி இதுவரை 33 கோடியே 47 லட்சம் வெள்ளி மதிப்பிலான வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. கடந்தாண்டு எஸ். டி.இ.சி. 5 கோடி வெள்ளி மதிப்பிலான வர்த்தக வாய்ப்புகளைப் பெற்றதோடு முதலீட்டாளர்கள், வணிகர்கள் மற்றும் வருகையாளர்ளுக்கும் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெள்ளத் தடுப்புத் திட்டங்களை மேற்கொள்ள சிலாங்கூர் அரசு வெ.55.6 கோடி நிதி ஒதுக்கீடு

ஷா ஆலம், வெள்ளத்தைத் தடுப்பதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு சிலாங்கூர் அரசு 55 கோடியே 66 லட்சம் வெள்ளியை அங்கீகரித்துள்ளது. வெள்ளத் தடுப்பணை, வெள்ளத் தடுப்புச் சுவர்கள், வெள்ள நீர் சுரங்கம், குறுக்கு நீர் வழித்தடம் போன்ற திட்டங்களை அந்த துறை மேற்கொள்ளும் என்று அவர் சொன்னார். பருவநிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு மாநில அரசு அமல்படுத்தும் வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து எலிசபெத் கேள்வியெழுப்பியிருந்தார்.






# ஷா ஆலம் ஸ்டேடியம் பொது நிதியை பயன்படுத்தாத - ஒரு கூட்டுத் திட்டம்

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் மேம்பாட்டு வேலைகளை ஆரம்பிக்கப்படவுள்ள இத் திட்டம் 3முதல் 4 ஆண்டுகளுக்குள் கட்டுமானம் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கட்டுமானம் உயர்ரக தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதுடன், தற்போதைய அரங்கத்தைப் போன்று பல வித பயன்பாட்டுக்கு ஏற்றதாக இருக்கும் என்றார் எஸ்பிஜ யின் தலைமை செயல்முறை அதிகாரி நொரித்தா முகமாட் சீடேக்.

ஷா ஆலம் ஸ்டேடியத்தை மேம்படுத்த மலேசியன் ரிசோர்சஸ் கார்ப்பரேஷன் பெர்ஹாட் (எம்ஆர்சிபி) க்கு மாநில அரசுக்கு தனது உத்தேச ஒப்பந்த கடிதத்தை (LOI) சமர்ப்பித்தது.

உத்தேச ஒப்பந்தத்தை LOI சமர்ப்பிப்பை மாநில அரசு செயலாளர் டத்தோ ஹரிஸ் காசிம் MRCB நிர்வாக துணைத் தலைவர் டத்தோ டெல் அக்பர் கான் ஹைதர் கானிடம் சமர்ப்பித்தது, டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி சாட்சியாக இருந்தார்.

2017 ஆம் ஆண்டு புக்கிட் ஜாலில் தேசிய மைதானத்தை புதுப்பித்த அனுபவம் மற்றும் நிதி நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த திட்டத்தை நிர்வகிக்க MRCB நியமிக்கப்பட்டதாக ஒரு செய்தியாளர் கூட்டத்தில் அமிருடின் விளக்கினார்.

பரஸ்பர வெற்றி பெறும் பொது-தனியார் கூட்டாண்மை திட்டம் என இந்த மேம்பாட்டு திட்டத்தை விவரித்த அவர், மற்ற 15 நிறுவனங்களுடன் கடுமையான தேர்வு செயல்முறைகுப் பின் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது என்றார்.

LOI இன் விதிமுறைகளின் அடிப்படையில், புதுப்பித்தல் திட்டம் தொடர்பாக மேம்பாட்டு நிறுவனம் சிலாங்கூர் அரசாங்கத்துடன் இன்னும் ஆழமான விவாதங்களை நடத்தும் என்றார்."அனைத்து பரிந்துரைகளும் கருத்துகளும் ஆய்வு செய்யப்பட்டு, டெவலப்பரிடம் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும்" என்று அவர் கூறினார்.

## ஷா ஆலம் விளையாட்டரங்க மேம்பாடு ஆயிரக்கணக்கான பரிந்துரைகள்

சிலாங்கூர் மந்திரி புசார் கழகம் (எம்.பி.ஐ.) அண்மையில் ஏற்பாடு செய்திருந்த ஷா ஆலம் விளையாட்டரங்கம் (கே.எஸ்.எஸ்.ஏ.) தொடர்பான கண்காட்சியில் அத்திட்டத்திற்கு ஆயிரக்கணக்கான பரிந்துரைகள் பெறப்பட்டன. ஷா ஆலம் எஸ்.ஏ.சி.சி. பேரங்காடியில் ஜனவரி 26 முதல் பிப்ரவரி 10 வரை நடத்தப்பட்ட இந்த கண்காட்சியின் போது நேரடியாகவும் இணையம் வாயிலாகவும் பொதுமக்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்ததாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

## பிஃபா எனப்படும் அனைத்துலக காற்பந்து சங்கத்தின் தகுதி அங்கீகாரம் பெற வேண்டும்

எம் ஆர்சி பி (MRCB) தொழில் துறை மேலாளர் முகமாட் இம்ரான் முகமாட் சாலேவுடன் ஒரு விளக்க கூட்டத்தில் கலந்து கொண்ட பின் 80 ஹெக்டேர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் பிஃபா எனப்படும் அனைத்துலக காற்பந்து சம்மேளனத்தின் தகுதி அங்கீகாரம் பெறும் என இம்ரான் நம்பிக்கை தெரிவித்தார்

மேலும் விவரித்த அவர் எளிதில் மாற்றிக் கொள்ளக்கூடிய மூன்று வகையான மைதானங்களை இந்த அரங்கம் கொண்டிருக்கும். அவை புல் திடல், செயற்கை புல் தரை மற்றும் காண்கிரேட் சிமெண்ட் தரை ஆகும்.

இந்த திட்டம் பொது நிதி எதுவும் பயன்படுத்தப்படாது. மேலும் இந்த திட்டம் இலகு ரயில் சேவையை கொண்டிருக்கும்.

கடந்த ஆண்டு ஜூலை 15 ல் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி இப்போதைய அரங்கை சரிசெய்து மேம்படுத்த 78.7 கோடி வெள்ளி செலவு பிடிக்கும் என சில கட்டுமான ஆய்வு நிறுவனங்களின் பரிந்துரைகள் குறித்து கருத்து தெரிவித்திருந்தார்.

## பொழுதுபோக்கு மைதானம் RM39,000 செலவில் மேம்படுத்தப்பட்டது – பெட்டாலிங் ஜெயா மாநகராட்சி

பெட்டாலிங் ஜெயா, வடக்கில் உள்ள SS20 இல் வசிப்பவர்கள், இம்மாத தொடக்கத்தில் அப்பகுதியில் உள்ள பொழுதுபோக்கு மைதானம் முழுமையாக மேம்படுத்தப் பட்டதால், மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த திட்டத்திற்காகப் பெட்டாலிங் ஜெயா மாநகராட்சி RM39,000 ஒதுக்கியதாகப் பண்டார் உத்தாமா சட்டமன்ற உறுப்பினர் கூறினார்.

"இந்த மைதானம் குடியிருப்பாளர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, குடியிருப்புவாசிகள் இதனைப் பயன்படுத்திக் கொண்டு, நல்முறையில் பாதுகாப்பார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையில், SS20 குடியிருப்போர் சங்கத்தின் செயலாளர் டத்தின் நோர்சியா சுலைமான், பிரதிநிதிகள், பெட்டாலிங் ஜெயா மாநகராட்சி மற்றும் பொழுதுபோக்கு மைதானத்தை மேம்படுத்த உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

"இந்த மைதானம் குடியிருப்பாளர்கள் மட்டுமல்ல, அருகில் உள்ள பள்ளி மாணவர்களும் பயன்படுத்துகின்றனர், மேலும் இங்கு பொழுது போக்கிற்காகவும் ஓய்வெடுக்கவும் வயதானவர்கள் வருகின்றனர்," என்று அவர் கூறினார்.



Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor